Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். பிலவ ஆனி 16 ஆம் நாள் முஹர்ரம் 16 (30-6 61) வெள்ளிக்கிழமை இதழ் 117

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்–2. மதுரை

# இலங்கை 17 பிரிவுகள்

## நாளை முதல் இ. போ. ச. நிர்வாக முக்கிய மாறுதல்

கொழும்பு, வியாழன்

ஜுலைமாதம் முதல்திகதி முதல் இலங்கைப் போக்குவரத்து சபை 17 நிர்வாகப் பிராந்தியங்கள்ாகப் பிரிக்கப் படவிருக்கிறது. ஒரு பிரதம நிர்வாகஸ்தரின் கீழ் இவ்விதம் பிரிப்பதனல் பஸ்சேவை திறமையாக நடைபெற வழி ஏற்படுமெனக் கூறப்படுகிறது.

அந்தந்தப் பிராந்தியங்களின் விஷயங்களுக்கு அப்பகுதியின் நிர்வாகஸ்தர் பொறுப்பு வகிப்பார். ஒவ்வொரு பிராந்திய நிர்வாகஸ்தரும் 5க்கு மேற்படாத நிலையங்களை மேற்பார்வையிடுவார். பொதுமக்களின் குறைபாடுகள் இனி மத்திய அதிகாரிக்குப் பதில் அந்தந்தப் பிராந்திய நிர்வாகிகளுக்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

### கருவாடு இறக்குமதி

கொழும்பு, வியாழன்

இவ்வருடம் ஆகஸ்ட்மாதத்திலிருந்து கருவாடு இறக்குமதி, விநியோகம் செய்யும் முழு உரிமையும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடமே இருக்கும்.

இந்த ஸ்தாபனத்திடம் இதற்கான வசதிகள் இருப்பதாக உணவு வர்த்தக கப்பல்போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தெரிவித்தார்.

திரு. எம். அப்துல் ஜபார் தலைமையிலுள்ள கமிட்டியின் ஆலோசனையின்பேரிலேயே மந்திரி இந்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்கள் கருவாடு இறக்குமதி செய்வதை இப்புதிய தீர்மானம் தடைசெய்யும்.

### விஸாவரி கட்டளை வாபஸாகும்

கொழும்பு, வியாழன்

விசாவரி கட்டுமாறு கேட்டு நகரசுத்தித் தொழிலாளருக்கு அனுப்பப்பட்டிருந்த கட்டளையை குடியேற்ற வெளியேற்ற இலாகா விரைவில் வாபஸ் பெறுமெனத் தெரிகிறது.

இத்தொழிலாளர் ஸ்தல ஸ்தாபன சேவையில் இருப்பதால் விசாவரியிலிருந்து விலக்குஅளிக்கப்பட்டவர்களென்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கமும் முன்னர் அறிவித்திருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இத்தொழிலாளர்கள் சொற்ப பணம் கூட வரியாகச் செலுத்த முடியாத நிலையிலிருக்கின்றனர் என்று தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு மேலும் சுட்டிக்காட்டியிருந்தது.

இதைத் தொடர்ந்தே இவர்களுக்கு அனுப்பப்பட்ட கட்டளைகளை வாபஸ் பெற குடியேற்ற வெளியேற்ற இலாகா நடவடிக்கை எடுத்துள்ளது.

சமயக் குருமார்களுக்கு அனுப்பப்பட்ட கட்டளைகளையும் இலாகா வாபஸ் பெறுமெனத் தெரிகிறது.

## பலதேவ்சிங் சடலத்துக்கு மக்கள் இறுதி மரியாதை

### ராணுவ வண்டி மூலம் சொந்த கிராமத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது

புதுடில்லி, ஜுன்29

காலஞ்சென்ற இந்தியாவின் முதலாவது பாதுகாப்புமந்திரி சர்தார் பலதேவ்சிங்கின் சடலம், ஒரு படை விமானமூலம் அவரது ராஜ்யமான பஞ்சாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சடலத்துடன் மத்திய மந்திரி சர்தார் சுவர்ன் சிங்கும் சென்ருர். விமானம் இறங்கியதும் சாண்டிகட் விமானநிலையத்தில் கூடியிருந்த ஏராளமான மக்கள் மறைந்த தலைவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர்

பஞ்சாப் முதன் மந்திரி, மற்றும்பல தலைவர்கள் சார்பில் சடலத்தின் மீது மலர்வளையம் வைக்கப்பட்டது. அங்கிருந்து சர்தார் பலதேவ்ங்சிகின் சடலம் ராணுவ வண்டியில் வைக்கப்பட்டு அவரது சொந்தக் கிராமத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இன்று இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

### ஆரோக்கியமான குழந்தைகள்

முள்ளியவளை, வியாழன்

முள்ளியவளைக் கிராமச் சங்கத்தினல் 'கெள அன் கேற்' ஸ்தாபனத்தின் ஆதரவில் இங்குள்ள அரசினர் மருந்துச்சாலையில், ஆரோக்கியமான குழந்தைகளைத் தெரிவு செய்யும் போட்டி ஒன்று நடாத்தப்பட்டது.

நீராவிப்பிட்டி செல்வன் எல். சமூன், கணுக்கேணி செல்வன் என். ஜெகதீஸ்வரன், நீராவிப்பிட்டி செல்வி ஏ. சித்தி பரீதா ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்ரும் பரிசுகளைப் பெற்றனர். மூன்று ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு வைத்திய அதிகாரி திரு. எஸ். பத்மநாதன், முள்ளியவளை அப்போதிக்கரி திரு. கே. இராசரத்தினம், தனியூற்று செளக்கியப்பரிசோதகர் திரு. எம். இராசதுரை ஆகியோர் மத்தியஸ்தராகக்கடமையாற்றினர்.

## மிளகாய் உற்பத்தியில் கமக்காரர் கஷ்டம்

### தரம் பிரிப்பதில் ஏற்படும் காலதாமதம் காரணமாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள விளைபொருள் விருத்தி விற்பனவுச் சங்கங்கள் கமக்காரர்களிடமிருந்து மிளகாயைக் காலத்தோடு கொள்வனவு செய்ய முடியாதிருப்பதினல் கமக்காரர்கள் தமது மிளகாயை விற்க முடியாது மிகுந்த கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. வட பகுதி விவசாய விருத்தி விற்பனவுச் சங்கங்களின் சமாசத்தில் பெருந்தொகையான மிளகாய் தேங்கிக் கிடப்பதனல் சங்கங்கள் மிளகாயை மேற்கொண்டும் கொள்வனவு செய்ய முடியாமலிருப்பதே இதற்குக் காரணமாகும்.

இச்சமாசம் அரசாங்கத்துக்கு விற்கும் மிளகாயின் தரத்தை வகுப்பது உத்தரவாத விலைத்திட்டப்பகுதியின் வேலையாகும். இவர் மிளகாயின் தரத்தை வகுத்துக் கொடுப்பதில் காலதாமதமெடுப்பதால் சமாசத்தில் மிளகாய் தேங்கிக் கிடக்கவேண்டியுள்ளது.

மிளகாயைத் தரம்வகுப்பதில் ஏற்படும் தவறுகளுக்கு உத்தரவாத விலைத்திட்டப் பகுதியே பொறுப்பேற்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளபடியால் இவர்கள் இவ்வேலையைச் செய்வதில் தயங்குகிருர்களெனச் சொல்லப்படுகிறது. இதனல் சமாசம் மிளகாயை அரசாங்கத்துக்கு உடனுக்குடன் விற்க முடியாமலும், அங்கு மிளகாய் தேங்கியிருக்கிறபடியால் கமக்காரர்களிடமிருந்து மிளகாயை மேற்கொண்டு கொள்வனவு செய்யமுடியாமலும் இருப்பதாகத் தெரிகிறது.

### பொற் தொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம்,வியாழன்

யாழ்ப்பாணம் வண்ணர் பண்ணை பொற்தொழிலாளர் பொதுச் சேவைச் சங்கத்தின் விசேட நிர்வாகக் கூட்டமொன்று சங்கத் தலைவர் திரு. செ. கணபதிப்பிள்ளை தலைமையில் வண்ணை பெரியபுலம் பாடசாலையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சங்கத்தின் ஆதரவில் ஓர் மத்திய தொழிற்சாலை ஒன்று ஸ்தாபித்து அதன்மூலம் தொழில்விருத்தியைப் பெருக்குவதுடன் தொழிலாளரின் குறைபாடுகளை அரசின்ரின் ஆதரவுடன் நீக்கி வைக்க வேண்டுமென்றும் இத் தொழிற்சாலையில் வண்ணர்பண்ணை பொற்தொழிலாளர் உட்பட ஏனைய பொற்தொழிலாளரையும் பங்காளராகச் சேர்த்துக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### கண்டியில் நைஜீரிய பிரதமர்

கண்டி, வியாழன்

கிழக்கு நைஜீரியப் பிரதமர் இன்று கண்டிக்கு விஜயம் செய்து பேராதனை பூந்தோட்டம், பல்கலைக்கழகம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டார்.

## திருநெல்வேலி மகளிர் விவசாயப் பள்ளியின் திறமை

### தற்காலிக விவசாய மந்திரி பாராட்டு

கொழும்பு, வியாழன்

தற்காலிக காணி விவசாய மந்திரி திரு. தென்னக்கூன் கடந்தவாரம் யாழ்ப்பாணக் குடாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிருர்.

யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி மகளிர் விவசாய பாடசாலைக்கு விஜயம் செய்த மந்திரி, அது திறமையாக நடத்தப்படுவதாக விவசாய இலாகாவைப் பாராட்டினர்.

மந்திரியுடன் மற்றும் பல அதிகாரிகளும் யாழ்ப்பாணக் குடாவில் சுற்றுப்பிரயாணம் செய்தனர். திருநெல்வேலி மகளிர் விவசாயப் பாடசாலையில் மாணவிகள் பாடல்களை இசைத்து, கிராமிய நடனங்களுடன் மகிழ்ச்சியுடன் வரவேற்றது தமக்கு நினைவில் இருப்பதாயும் மந்திரி கூறியிருக்கிருர். யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் மந்திரியுடன் சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

### "ஆலயவழிபாடே சிறந்தது"

கொழும்பு, வியாழன்

கரம்பன் சைவ மகாசபை ஆரம்பவிழாக்கூட்டம், கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்த டாக்டர் வை. நடராஜா பேசுகையில், மனிதனின்வாழ்வு கடவுளிடம்தான் தங்கியிருக்கிறது. பக்திசிரத்தையுடன் பகவானைப் பூசிக்கும் இடம் உள்ளக்கோயில் என்றும், ஆலயவழிபாட்டினல் நல்லெண்ணமும், நற்செயல்களும் நம்

(5ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

### விற்பனைக்கு

EN A 50 கறுப்பு நிறம் 6000 தொடர்பிலக்கமுள்ள நல்ல நிலைமையிலுள்ள கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: போன்: 689, 221/3, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் அல்லது பார்வதி அச்சகம் யாழ்ப்பாணம்.

### காணவில்லை

26-6-61 திங்கட்கிழமை பி.ப 3 மணியிலிருந்து பண்டா அல்லது விஜயசூரியா என்ற கருமை நிறமுடைய, வலது கைப்பெருவிரல் இரண்டுஉள்ள பையனைக் காணவில்லை. போகும்போது கறுப்புக் காற்சட்டையும், கோடு போட்ட சட்டையும் அணிந்திருந்தான். பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இனாம் கொடுக்கப்படும். அறிவிக்குமிடம்: M. T. பொன்னம்பலம், 108, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். போன் 380.

யாழ்ப்பாணத்தில் காணிகள், வீடுகள் மற்றும் அசைவு, அசைவில்லாத பொருட்களை வாங்கவோ விற்கவோ விரும்பினாலும் அல்லது ஆதனங்களின் பொறுப்போடு பணம் எடுக்கவோ, கொடுக்கவோ விரும்பினாலும் தொடர்பு கொள்ளவும்: N. Arulanantham, Auctioneer & Broker, 34, Manipay Road, Jaffna.

### தேவை

யாழ்ப்பாணத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பெற்றுள்ள பண உதவி ஸ்தாபனத்திற்கு ஏஜெண்டுகளும், வெளிவேலை உத்தியோகஸ்தர்களும், மாதச் சம்பள அடிப்படையில் வேலை செய்வதற்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேவை. ஆண்-பெண் இருபாலாரும் 10 சத முத்திரையுடன் மனுச் செய்க.

தலைமை அலுவலகத்திற்கும் கொடிகாமம் கிளை நிலையத்திற்கும் நம்பிக்கை வாய்ந்த காஷியர் - கிளார்க் தேவை. இத்துறையில் ஆர்வமுள்ள ஆண் - பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

The Secretary, Free Lanka Benefit Corporation, 9/1, Momsac Building, Stanley Rd., Jaffna.






## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

**வைத்தியர் பரிபூரணானந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி: யாழ்ப்பாணம்.


# கொலை செய்வதாக மகன் பயமுறுத்ினாராம்

மாவிட்டபுரம், வியாழன்

கீரிமலையைச் சேர்ந்த பூதப்பிள்ளை பூலோகசிங்கம் என்பவர் தனது தகப்பனாரான அம்பலவாணர் பூதப்பிள்ளை என்பவரைக் கொலை செய்வதாகப் பயமுறுத்தியதாயும், அவரின் வீட்டினுள் அத்துமீறிப்பிரவேசித்ததாகவும் காங்கோசன் துறை பொலிஸாரால் குற்றஞ் சாட்டிமல்லாக நீதிபதி திரு. டபிள்யூ. டி. தாமோதரம் முன்னிலையில் தீாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி தான் குற்றவாளி அல்ல என்று கூறினார்.

எதிரியின் தகப்பனாரான அம்பலவாணர் பூதப்பிள்ளை சாட்சியமளிக்கையில், "ஆனி மாதம் 12-ந்திகதி இரவு 8 மணியளவில் நானும், மனைவியும், மகளும், எனது பேரப்பிள்ளையும் எங்கள் வீட்டில் இருந்தோம். அச்சமயம் எதிரியாகிய எனது மகன் அத்துமீறி விட்டினுள் பிரவேசித்து, தான் எங்கள் எல்லோரையும் கொலை செய்ய வந்திருப்பதாகக் கூறி எங்களைப் பயமுறுத்தினார். எதிரியின் பயமுறுத்தலைக் கேட்டு எனது மனைவியும் மகளும் எதிர் வீட்டிற் சென்று தஞ்சம் புகுந்தார்கள். நான் விதானையிடம் சென்று முறைப்பாடு செய்துவிட்டு வருகையில் எதிரி எதிர்த்திசையில் வந்தார். அவர் என்னைப் பார்த்துப் பூதனை விடியமுன்னர் கொலை செய்வேன் என்று கூறினார்" என்றார்.

நீதிபதி:- (எதிரியைப் பார்த்து) ஏன் விடியுமட்டும் பார்த்துக்கொண்டிருந்தாய்? உனது தகப்பனாரை உடனேயே கொலை செய்திருக்கலாமே?

எதிரி:- ஐயா, அவர் சொல்லும் சாட்சியம் முழுதும் பொய். நான் அப்படி ஒன்றும் கூறவில்லை.

நீதிபதி:- நீ அன்று கள் குடித்திருந்தாயா?

எதிரி:- நான் பணம் கொடுத்து குடிக்கவில்லை ஐயா!

மேல்விசாரணை ஜூலை மாதம் 24ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது,

## லக்ஷ்மணபுரியில் காலரா 33 பேர் பலி; 300 பேர் ஆஸ்பத்திரியில்

லக்ஷ்மணபுரி, ஜூன் 29

லக்ஷ்மணபுரியில் காலரா நோய்க்கு 33 பேர் பலியானார்கள். சுமார் 300 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சமீபத்தில் மூஹர்ரம் பண்டிகைக் கொண்டாட்டத்தின்போது உபயோகிக்கப்படாதிருந்த பாழடைந்த ஒரு கிணற்று நீரைச் சிலர் குடித்ததாகவும் இதைத் தொடர்ந்தே காலரா நோய் இங்கு பரவியதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பீகாரிலும் காலராவுக்கு 130 பேர் பலியாயினர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

## கி. ச. தலைவருக்கு பாராட்டு

அல்லைப்பிட்டி, வியாழன்

"கிராமச் சங்கத் தலைவரின் பெருமுயற்சியால் நமது கிராமத்திற்கு ஒரே முறையில் இரு ரோட்டுகள் கிடைத்ததையிட்டு அவரை நான் பாராட்டுகின்றேன். 26 ஆண்டுகள் தலைவராக அவர் தொடர்ந்து பணியாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது." இவ்வாறு அல்லைப்பிட்டிக் கிராமச் சங்கக் கூட்டத்தில் தலைவர் திரு. க. கைலாசபிள்ளை ஜே பி. யைப் பாராட்டிப் பேசிய திரு. செ. இராசையா குறிப்பிட்டார்.

மீன்பிடித் தொழிலாளரின் உபயோகத்துக்காக அல்லைப்பிட்டி 2-ம் இலக்க ஒழுங்கையை வீதியாக்கித் தரும்படி மீன்பிடி இலாகாவைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கூட்டத்தில் நிறைவேறியது.

## பாரத கலை, கலாசாரப்பகுதி டிரினிடாட் பல்கலைக் கழகத்தில் இடம் பெறும்

புதுடில்லி, ஜூன் 29

டிரினிடாட் பல்கலைக் கழகத்தில் பாரத கலை, கலாச்சாரப் பிரிவு ஒன்றை ஸ்தாபிப்பதற்கு பாரத அரசாங்கம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டது.

டிரினிடாட் பல்கலைக் கழகத்துக்கு பாரத கலை, கலாச்சாரம் சம்பந்தமான நூல்கள் வழங்குவதற்கு பாரத கலாசார உறவுகள் சபை ஒப்புக் கொண்டுள்ளது.

டிரினிடாட் பல்கலைக் கழகத்தில் பாரத கலை, கலாசாரப் பிரிவு ஒன்றை பாரத அரசாங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று இப்பொழுது இந்தியா வந்துள்ள டிரினிடாட் பிரதமர் டாக்டர் எரிக் வில்லியம்ஸ் தெரிவித்திருந்தார்.

டாக்டர் எரிக் வில்லியம்ஸ் நேற்று பிரதமர் நேருவுடன் விருந்துண்டார்.

## பாடசாலைக் கட்டடம் விழ்ந்தது

### மாணவர் காயம்; தளபாடங்கள் சேதம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தின் ஓலையால் வேய்ந்திருந்த கட்டடத்தின் ஒருபகுதிநேற்றுநண்பகல் திடீரென விழ்ந்துவிட்டது. பலமாக அடித்த காற்றின் விளைவே இதற்குக் காரணமெனத் தெரிகிறது. இக் கட்டடத்துக்குள் இருந்தமாணவர்களிற்சிலர்சிறு காயமுற்றனரெனினும் அதிக மானோர் அங்கிருந்து வெளியே நிவிட்டனர். இதனால் எதுவித உயிர்ச்சேதமும் நேரவில்லை.

இக் கட்டடத்துக்குள்ளிருந்த தளபாடங்கள் சில நொருங்கி விட்டன. பொலிஸார் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை செய்தனர்.

# கடாங்கா சுதந்திர ராஜ்யமாகவே இருக்கும்

## ஜனாதிபதி ஷோம்பே அறிவிப்பு

எலிஸபெத்வில்லி, ஜூன் 29

கடாங்கா மாகாணம் தொடர்ந்தும் சுதந்திர தனி ராஜ்யமாகவே இருந்துவரும் என்று கடாங்கா அதிபர் திரு. ஷோம்பே நேற்று கடாங்கா சட்டசபையில் அறிவித்தார்.

சுதந்திர தனி அரசு என்ற நிலையிலிருந்து கடாங்கா ஒரு போதும்மாறமாட்டாது என்று திரு. ஷோம்பே தெரிவித்தார்.

லியப்போல்ட்வில்லி அரசாங்கத்தினால் கைதுசெய்யப்பட்டு சுமார் இரண்டு மாதகாலம் காவலில் வைக்கப்பட்டிருந்த திரு. ஷோம்பே சமீபத்தில் விடுதலை செய்யப்பட்டதும் காங்கோவின் முன்னேற்றத்துக்காக இதர காங்கோலியத் தலைவர்களுடன் ஒத்துழைக்கப் போவதாகவும் கடாங்காவுக்குச் சென்றபின் மீண்டும் லியப்போல்ட்வில்லியில் வந்து தங்கியிருக்கப்போவதாகவும் கடாங்காவுக்குப் புறப்படுமுன் லியப்போல்ட்வில்லியில் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

திரு. ஷோம்பே கடாங்காவுக்குப் புறப்பட்டுச் சென்றபின் லியப்போல்ட்வில்லி அரசாங்கம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் காங்கோவுக்கும் கடாங்காவுக்கு மிடையிலுள்ள எல்லைத் தடைகளை நீக்குவதென்றும் கடாங்காவின் ஏற்றுமதிப் பொருட்களை காங்கோ மூலமாக அனுப்புவதென்றும் கடாங்கா இராணுவத்தை காங்கோ இராணுவத்துடன் ஒரே தலைமையின்கீழ் இணைப்பதென்றும் லியப்போல்ட்வில்லி பிரதமர் திரு. இலியோவுடன் திரு. ஷோம்பே ஒப்பந்தமொன்று செய்துள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று கடாங்கா சட்டசபைக்கூட்டத்தில் திரு. ஷோம்பே பேசுகையில் கடாங்கா சுயேச்சை அரசாகத் தொடர்ந்திருக்குமென்று அறிவித்தார்.

லியப்போல்ட்வில்லி அரசாங்கத்தினரிடமிருந்து தாம் விடுதலை பெறுவதற்கு உதவிபுரிந்த காங்கோ இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மொபுட்டுவை திரு. ஷோம்பே பாராட்டினார்.

## மணிபாகவதருக்கு பாராட்டு

உடுப்பிட்டி, வியாழன்

"சைவமுந் தமிழும் ஒருங்கே பிறந்து, ஒருங்கேவளர்ந்தவை. முத்தமிழ் கொண்டு சைவத்திற்குப் பொன்னாடைபோர்த்த நாயன்மாரின் தொண்டுகளை தமிழ்மக்கள் மறந்துவாழ முடியாது. அதேபோல இன்று தமிழ்கொண்டு சைவத்தை அழகுறச் செய்யும் பணியில் முத்தமிழ்மணி ஸ்ரீ மணிபாகவதர் ஈடுபட்டிருப்பது குறித்து தமிழர் மகிழ்ச்சியுறவேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. தெட்சணாமூர்த்தி நேற்று தச்சந்தோப்பு ஆலய முன்றிலில் திரு. மணிபாகவதருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்த வைபவத்தில் கூறினார். இவ்வைபவத்தை ஒழுங்குசெய்த திரு. வி. எஸ். கந்தப்பு கூறியதாவது:-

"நாஸ்திக இயக்கம் தீபோலப் பரவி வருங்காலத்தில் கோவில்களே கலைமன்றங்களாக விளங்குவதுடன், பொதுகலைப் பணிமன்றங்களாகவும் விளங்க வேண்டும். கடவுள் இல்லை என்போரும் கதாகாலட்சேபம் கேட்க விருப்புடையோராயிருப்பதை நமக்குச் சாதகமாக்கி அவர்களையும் கோவிலுக்கு வரச்செய்தல் அவசியம்.

ஸ்ரீ மணிபாகவதர் தமக்கு அளித்தகௌரவத்துக்கு நன்றி தெரிவித்தார்.


## மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது




மோனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு




இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

**ஏ. எம். புகாரி அன் கோ**

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# 'பயமுறுத்தலுக்கு பணியமாட்டோம்'

## ரஷ்யாவுக்கு கென்னடி பதில்

வாஷிங்டன், ஜூன் 29

**"ஜேர்மனி, பெர்லின் இவற்றின் எதிர்காலம் சம்பந்தமாக சோவியத் ரஷ்யாவின் மிரட்டலுக்கு நாங்கள் பணிந்துவிடமாட்டோம்" என்று அமெரிக்க ஜனாதிபதி கென்னடி நேற்று அறிவித்தார்.**

ஜேர்மனி சம்பந்தமாக மேற்கு நாடுகளும் சோவியத் ரஷ்யாவும் இவ்வருட முடிவுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்றும் இப்படியான ஒரு ஒப்பந்தத்துக்கு மேற்கு நாடுகள் இணங்காவிட்டால் கிழக்கு ஜேர்மனியுடன் சோவியத் ரஷ்யா ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுமென்றும் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபின் மேற்கு பெர்லினுக்குள் மேற்கு நாட்டவர் செல்வதற்கும் மேற்குபெர்லினுடன் தொடர்பு கொள்வதற்கும் முதலில் கிழக்கு பெர்லினின் அனுமதியைப் பெறவேண்டுமென்றும் சோவியத் பிரதமர் திரு. குருஷேவ், வியன்னு சந்திப்புக்குப்பின் மீண்டும் மீண்டும் கூறி வருவது தெரிந்ததே.

வியன்னுவில் சோவியத் பிரதமர் குருஷேவை சந்தித்துப் பேசியபின் அமெரிக்கவானெலியிலும் டெலிவிஷனிலும் திரு. கென்னடி பேசியபின் நேற்று முதல் தடவையாக பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் பேசினர். ஜேர்மனிபற்றி அவர் கூறி வருவதைக் குறிப்பிட்டு திரு. கென்னடி பின்வருமாறு கூறினர்.

### சோவியத் ரஷ்யாவே பொறுப்பு

ஜேர்மனியிலும் பெர்லினிலும் இப்பொழுது அமைதி நிலவுகிறது. இந்த அமைதி கலைக்கப்பட்டால் அதற்கு சோவியத்ரஷ்யாவே பொறுப்பேற்கவேண்டும்.

பெர்லின் சம்பந்தமாக மேற்கு நாடுகள் உறுதிகொண்டுள்ளன. என்று திரு. கென்னடி கூறினர்.

கிழக்கு பெர்லின் சுயேச்சையாக இருக்குமென்ற ரஷ்யாவின் திட்டம் மேற்குஜேர்மனியின் உரிமைகளைச் சிறிதுசிறிதாகப் பறித்தெடுத்துக்கொள்வதுதான் என்று அமெரிக்க ஜனாதிபதி கென்னடி கூறினர்.

ஜேர்மனி சம்பந்தமாக உலக நெருக்கடி ஏற்படுமானல் அந்த நெருக்கடியை சோவியத் ரஷ்யாவே உற்பத்தி செய்ததாகுமென்று திரு. கென்னடி கூறினர்.

ஜேர்மனி சம்பந்தமாக சோவியத் ரஷ்யாவின் திட்டம் ஒருதலைப் பட்சமானதென்று குறிப்பிட்ட திரு. கென்னடி ஜனநாயக சமுதாயத்தில் ஐக்கியத்தையும் உறுதியையும் சோவியத் ரஷ்யா குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது என்று எச்சரித்தார்.

பெர்லின் பிரச்சினை சம்பந்தமாக எப்பொழுதும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக திரு. கென்னடி தெரிவித்தார்.

### அணுஆயுத பரீட்சைத்தடை

அணு ஆயுத பரீட்சைகளுக்குத் தடைவிதிப்பது சம்பந்தமாக ஜெனிவாவில்தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா முயற்சிசெய்துவருமென்றும் அணுஆயுத பரீட்சைகளுக்குத் தடை விதிப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து முயற்சி செய்யுமென்றும் அவர் கூறினர்.

### கென்னடி சொன்ன புலிவேட்டைக் கதை

இன்னும் பத்துவருடங்களில் பண்டங்களின் உற்பத்திப் பெருக்கத்தில் உலக நாடுகளெல்லாவற்றுக்கும் மேலாக ரஷ்யாவே முன்னணியில் நிற்குமென்று திரு. குருஷேவ் கூறியது பற்றி ஒரு நிருபர் திரு. கென்னடியிடம் கேட்டபொழுது "இது புலிவேட்டை ஆடப்போனவன் கதைபோல இருக்கிறது" என்ருர். "புலி வேட்டைக்குச் செல்லுவதற்கு முன்பாகவே புலித்தோலை மாட்டுவதற்கென சுவரில் ஆணி அறைந்து வைத்தானும் ஒருவன்" என்று திரு. கென்னடி கூறினர்.

### விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கவேண்டும்

சோவியத் யூனியன் இப்பொழுதும் அணு ஆயுதங்களைப் பரீட்சை செய்கிறதா? என்று ஒரு நிருபர் கேட்டதற்கு திரு. கென்னடி கூறியதாவது:-

அமெரிக்காவுக்குத் தெரியாமலே சோவியத்யூனியன் அணு ஆயுதங்களைப் பரீட்சை செய்யக் கூடும். ரஷ்யா அணு ஆயுதங்களைப் பரீட்சை செய்கிறதாவென்பதை அறிந்து கொள்ள வேண்டியது விஞ்ஞானிகள் பொறுப்பு.

## மகாநாட்டுக்கு அழைப்பு

லண்டன், ஜூன் 29

ஜேர்மன் பிரச்சினை சம்பந்தமாக ஒரு சமாதானமான தீர்வு காண்பதற்கு மேற்கு நாடுகள் ஒரு மகாநாடு கூட்டுவதற்கு ஒழுங்கு செய்து வருவதாகவும் இந்த மகாநாட்டுக்கு சோவியத் ரஷ்யாவை மேற்கு நாடுகள் அழைக்க விருப்பதாகவும் இன்று அரசியல் வட்டாரங்களில் கூறப்பட்டது.

## குவாய்த் சூடானும் ஆதரவு

லண்டன், ஜூன் 29

எண்ணெய் வளம் மிக்க நாடான சுதந்திர குவாய்த் ராஜ்யத்தை சூடான் அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. குவாய்த் ராஜ்யத்துடன் சூடான் ராஜ்யத் தொடர்பு ஏற்படுத்தும்.

சுதந்திர குவாய்த் ராஜ்யத்தை ஆதரிப்பதென்று பாரசீகம், ஐக்கிய அரபு குடியரசு, சவூதி அரேபியா, ஜோர்டான் ஆகிய நாடுகளும் பிரட்டன், அமெரிக்கா ஆகிய வல்லரசுகளும் அறிவித்துள்ளன.

ஜோர்டான் மன்னர் ஹுசைனும் சாவூதிஅரேபியா மன்னர் சாவூதும் நேற்று குவாய்த் அரசாங்கத்துக்குத் தங்கள் பூரண ஆதரவை மீண்டும் தெரிவித்தனர்.

குவாய்த்ராஜ்யம் ஈராக்கைச் சேர்ந்ததது என்று ஈராக் பிரதமர் ஜெனரல் காசிம் சில தினங்களுக்கு முன் அறிவித்ததை அரபு நாடுகள் பலவும் கண்டித்துள்ளன.

## அமெரிக்காவுக்கு குருஷேவ் சவால்

மாஸ்கோ, ஜூன் 29

**"அமெரிக்காவின் பயமுறுத்தலுக்கோ மேற்கு நாடுகளின் பயமுறுத்தலுக்கோ சோவியத் யூனியன் பணிந்து விடமாட்டாது" என்று சோவியத் பிரதமர் திரு. குருஷேவ் நேற்று கிரம்ளினில் ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினர்.**

வடக்கு வியட்நாம் பிரதமர் பாம்வாங் டொங் தலைமையில் மாஸ்கோ வந்துள்ள தூது கோஷ்டியொன்றிற்கு கிரம்ளினில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் திரு. குருஷேவ் பேசினர்.

"ஜேர்மன் பிரச்சினை இவ்வருட முடிவுக்குள் தீர்க்கப்பட்டுவிட வேண்டும். ஜேர்மனி சம்பந்தமாக ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கு மேற்கு நாடுகள் இணங்காவிட்டால் கிழக்கு ஜேர்மனியுடன் சோவியத் ரஷ்யா ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளும்" என்று திரு. குருஷேவ் சொன்னர்.

"மேற்கு நாடுகளின் மிரட்டலுக்கு சோவியத் யூனியன் பணிந்துவிடாது. எல்லா நாடுகளுடனும் சமாதானமாக வாழவே ரஷ்யா விரும்புகிறது. ஜேர்மன் பிரச்சினையைச் சாட்டாகவைத்துக்கொண்டு மேற்கு நாடுகள் படை திரட்டக்கூடுமென்பது எமக்குத் தெரியும் இதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்" என்று கூறிய திரு. குருஷேவ் கிழக்கு ஜேர்மனி மீது படை பலத்தை உபயோகிக்க வேண்டாமென்றும் அது பயன்தர மாட்டதென்றும் மேற்கு நாடுகளைக் கேட்டுக் கொண்டார்.

## அங்கோலாவில் மேலும் துருப்புக்கள் குவிகின்றன

லண்டன், ஜூன் 29

போர்ச்சுக்கல் காலனி நாடான அங்கோலாவில் விடுதலை கோரி போராட்டம் நடத்தும் அங்கோலா தேசியவாதிகளை அடக்குவதற்காக போர்ச்சுக்கல் மேலும் மேலும் துருப்புக்களை அங்கோலாவில் கொண்டு போய்க் குவிக்கிறதென்று இங்குகிடைத்த செய்திகள் கூறுகின்றன.

இரண்டு தினங்களுக்குமுன் வடக்கு அங்கோலாவில் தேசியவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தி போர்ச்சுக்கல் படை முகாம்களிரண்டை நாசமாக்கிவிட்டதாகவும் இந்தத் தாக்குதலிலும் நேற்று நடந்த தாக்குதலிலும் 230 போர்ச்சுக்கல் துருப்புக்கள் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

தேசியவாதிகளின் இத்தாக்குதலைத் தொடர்ந்து நேற்று மூவாயிரம் துருப்புக்கள் லிஸ்பனிலிருந்து லுவண்டாவில் வந்திறங்கின. மேலும் 2500 போர்ச்சுக்கல் துருப்புக்கள் லிஸ்பனிலிருந்து அங்கோலாவுக்குச் சென்று கொண்டிருக்கின்றன.

அங்கோலாவில் போர்ச்சுக்கீஸியர் செய்யும்கொடுமைகளை ஆட்சேபித்து பிரிட்டிஷ் திருச்சபையைச் சேர்ந்த ஏழுபேர் கொண்ட தூதுகோஷ்டியொன்று பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஹியூம்பிரபுவைச் சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது.

நோட்டோ' எனப்படும் வட அத்லாந்திக் ஒப்பந்த ஸ்தாபனத்திலிருந்து போர்ச்சுக்கலை வெளியேற்ற வேண்டுமெனக் கோரி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் கொண்டுவந்த பிரேரணையை அரசாங்கம் நிராகரித்துவிட்டது.

இவ்வித தீர்மானங்களினுலும் நடவடிக்கைகளினுலும் எவ்வித பயனும் கிடைக்காது என்று உதவி வெளிவிவகார மந்திரி தெரிவித்தார்.

கேப்கனவரால், ஜூன் 29

மூன்று செயற்கைக் கிரகங்களைக் கொண்ட ஒரு ராக்கட்டை அமெரிக்கா இன்று வான வெளிக்கனுப்பியது.

ஐந்து தொன் எடையுள்ள இந்த ராக்கெட்டில் வான வெளியில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக அனுப்பப்பட்ட மூன்று கிரகங்களில் ஒன்றில் அணுசக்தி உற்பத்திக் கருவிகளும் மற்ற இரண்டில் வான வெளியில் கதிரியக்கத்தை அளவிடும் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

## கச்சார் ஜில்லாவில் அமைதி நிலவுகிறது

### "கலகத்தை அடக்க காங்கிரஸ் தலைவர்கள் தவறிவிட்டனர்"

ஷில்லாங், ஜூன் 29

கச்சார் ஜில்லாவில் இப்பொழுது அமைதி நிலவுவதாக அப்பகுதிக்குச் சென்று திரும்பிய அஸ்ஸாம் ராஜ்ய விவசாய மந்திரி திரு. சௌத்ரி கூறினர்.

அஸ்ஸாம் மொழிப் பிரச்னை சம்பந்தமாக இந்திய உள்விவகார மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி கூறிய சமரசத் திட்டத்தை கச்சார் ஜில்லாவின் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொள்கிருர்களென்று திரு. சௌத்ரி கூறினர்.

இம்மாதம் 19ந் திகதி ஹயிலாக்கண்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திலும் ஊர்வலத்திலும் பாகிஸ்தானியர் கலந்துகொண்டதாகவும் பாகிஸ்தானுக்கு ஆதரவாக சுலோகங்களைக் கோஷித்துக்கொண்டு ஊர்வலத்தினர் சென்றதாகவும் சிலர் கூறுவது ஆதாரமற்றது, சிறிதுகூட உண்மையில்லை என்று திரு. சௌத்ரி தெரிவித்தார். ஹயிலாக்கண்டி கலவரம் இனக்கலகம் என்று அவர் கூறினர்.

கச்சார் ஜில்லா காங்கிரஸ் தலைவர்கள் சிரத்தையெடுத்திருந்தால் இக்கலகங்கள் ஒன்றும் தோன்றியிருக்கமாட்டாதென்றும் இக்கலகங்களுக்கு கச்சார் ஜில்லா காங்கிரஸ் தலைவர்களே பெரும் பொறுப்பென்றும் திரு. சௌத்ரி குற்றம் சாட்டினர்.

கச்சார் ஜில்லா சங்க்ராம் பரிஷத் தலைவர்கள் நேற்று மத்திய அரசாங்க சட்டமந்திரி திரு. ஏ. கே. சென்னைச் சந்தித்துப் பேசினர்.

கச்சார் ஜில்லா காங்கிரஸ் தலைவர்கள் மேற்கு வங்காள முதன்மந்திரி டாக்டர் பி. ஸி. ராயை நேற்றுச் சந்தித்தனர்.

## படகு கவிழ்ந்து 30 பேர் பலி

கல்கத்தா, ஜூன் 29

பீகாரில் நேற்று ஒரு நதியில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 30 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது. இதுவரை ஆறு சடலங்கள் தான் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நீரில் மூழ்கி இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும் குழந்தைகளுமென்று கூறப்படுகிறது.

## பலதேவ்சிங் காலமானர்

புதுடில்லி, ஜூன் 29

இந்தியாவின்முன்னுள் பாதுகாப்பு மந்திரியும், எம். பி. யுமான திரு. பலதேவ்சிங் இன்று அதிகாலை காலமானர். இருதய நோயால் காலமான திரு. பலதேவ்சிங்கிற்கு இப்பொழுது வயது 59.

பிரிவினை செய்யப்படாத பஞ்சாப் ராஜ்யத்தின் கவர்னராகவும் பதவி வகித்தவர் திரு. பலதேவ்சிங்.


## விநோதன்ஸ் அன் கம்பெனி

(வீட்டுக்கு வீடு விநியோக சேவை)

## எமது 4-வது ஆண்டுவிழா

★ வாடிக்கைக் காரர்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் கொண்ட ஒரே ஸ்தாபனம்.

★ சென்ற நாலு ஆண்டுகளாக வீட்டுக்கு வீடு விநியோக சேவையில் உங்கள் நன் மதிப்பைப்பெற்ற ஒரே ஸ்தாபனம்.

**விநோதன்ஸ் அன் கம்பெனி**

ஆஸ்பத்திரி வீதி, போன்: 286 யாழ்ப்பாணம்

### மணிவாக்கு

பேச்சு இறைவன் நமக்கு அளித்திருக்கும் வரப்பிரசாதம். அதனைச் சமயம் அறிந்து இடத்துக்கேற்றபடி உபயோகிக்கவேண்டும். உள்ளத்திற் கள்ளமின்றி நல்ல எண்ணத்துடன் பேசுதல் வேண்டும்.

—ஓர் அறிஞர்

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
ஆனி மீ 16௳ (30-6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## விடுதலைக் கைதிகளுக்கு புனர்வாழ்வு

கொழும்புத் துறைமுகத்தில் வேலை பார்த்த ஒருவர் திருட்டுக் குற்றத்துக்காக 6 வார கடுங்காவல் தண்டனை பெற்றார். தண்டனைக் காலம் முடிந்ததும் பழைய வேலையைக் கேட்டார். மறுக்கப்பட்டு விட்டது. பல இடங்களில் வேலைக்கு அலைந்தும், ஒரு வேலையும் கிடைக்கவில்லை. விடுதலை செய்யப்பட்ட கைதிகளின் உதவிச் சங்கமொன்றுள்ளது. உதவி ஏதும் செய்தால் ஒரு சிறிய வர்த்தகம் அல்லது தொழில் நடத்தலாமென்று அச்சங்கத்தைக் கேட்டதற்கு அவர்களும் கைவிரித்துவிட்டார்கள். ஒன்பது ஆண்டுகள் கழிந்தும் வேலை கிடைக்கவில்லை.

பலநாட்கள் உணவின்றிப் பட்டினி கிடந்துள்ளதாயும், உடுத்த உடையுமில்லை என்றும், மீண்டும் குற்றம்செய்ய மனம் பலபல நினைப்பதாயும் என்றாலும் தைரியமில்லாமல் தம்மை அடக்கிக்கொண்டுவருவதாயும், தாம் வாழ மற்றோர் "சான்ஸ்" அளிக்கக்கூடாதா? என்றும்மிகப்பரிதாபமாகப்பத்திரிகைக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார். குற்றம்செய்வது மனிதசுபாவம். அதற்குத் தண்டனையும் கிடைக்கிறது. தண்டனையைக் கழித்த பின்னும் அவர்கள் இவ்வுலகில் மீண்டும் கண்யமான பிரஜையாக வாழ வசதி இருக்க வேண்டும். ஆனால் சமூகமோ ஒருமுறை சிறை சென்றவரை, பகிஷ்காரம்செய்து வெறுத்து ஒதுக்குகின்றது. இது பெரும் பாவமாகும்.

உலகிலே தொழில்செய்து கண்யமாக வாழ வழியில்லாமையால், சிறைச்சாலையே மேலென்று கருதி, பலர் மீண்டும் மீண்டும் குற்றங்கள்செய்து சிறைச்சாலையை நாடுவது வழக்கமாகிவிட்டதைப் பார்க்கிறோம். விடுதலை அடைந்த கைதிகளுக்கு மீண்டும் கண்யமாக வாழ வழி இல்லாது போயின், சமூகத்தில் மேலும் மேலும் குற்றங்கள் அதிகரித்து மக்கள் நிம்மதியாக வாழமுடியாமலும் போகின்றது. ஆகவே பொதுமக்களின்நன்மையைக் கருதியாயினும், மாஜிக் கைதிகளுக்கு உதவிசெய்து, அவர்கள் உழைத்துப் பிழைக்க ஏதாயினும் வழிசெய்யவேண்டும்.

மேற்கத்திய நாடுகளில், கைதிகள் சிறையிலிருந்து விடுதலையடைந்ததும், அவர்களுக்கு ஏதாவது ஒரு வேலை தயாராகக் காத்திருக்குமாம். இலங்கையில் வேலையில்லாக் கஷ்டம் அதிகரித்துவருகையில் இது சாத்தியமில்லாதிருக்கலாம். என்றாலும் சிறையிலிருந்து விடுதலையானதும் அவர்கள் சுதந்திரமாக ஏதாவது சிறிய கடை வைத்தோ, தொழில் செய்தோ மரியாதையாக ஜீவனம் நடத்த அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டியது மிக அவசியம். விடுதலைக் கைதிகள் உதவிச் சங்கத்தார் போதிய பணமில்லை என்று பலருக்கு உதவி மறுப்பதாகத் தெரிகிறது. அச்சங்கத்துக்கு அரசாங்கம் போதிய மான்யம் அளிக்கவேண்டும்.

இவ்விஷயத்தில் ஸ்தலஸ்தாபனங்களும் தர்மசிந்தையுள்ள பொதுமக்களும் முன்வந்து, தத்தம் ஊர்களிலுள்ள விடுதலைக் கைதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்க உதவுவது மனிதாபிமானமாவதுடன், ஊர் மேலாக விளங்கவும் உதவி செய்ததாகும். சமூகக் குறைகளும் அறியாமையுமே குற்றம் செய்யக் காரணங்களாகும். ஆகவே அவர்கள்மீது அன்பு காட்டி அவர்களுக்கு வாழ்வளித்து உதவுவது மேலான புண்ணியமுமாகும்.

### டென்மார்க்கில்

# சமுதாய விருத்திக்கு தனிப்பெரும் திட்டம்

.... மோஜென்ஸ் பல் ....

**டென்மார்க்கில் நடைமுறையில் உள்ள சமுதாய நலனபிவிருத்தித் திட்டத்தின் சிறப்புக் குறித்து கேயன் சோளன் நகராண்மைக் கழக உறுப்பினர் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரை.**

தேசியரீதியில் சமூக நலனபிவிருத்திக் கழகங்களை உலகில் பெற்றிருக்கும் முதலாவது நாடு டென்மார்க்கே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஏழைகள், வேலை செய்ய இயலாதிருக்கும் வயதானவர்கள், வேலையின்றியிருப்போர் ஆகியோருக்குக் கிராமரீதியில் உதவிகள் வழங்கப்படுவதற்கு ஏற்ப ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதற்காக ஒவ்வொரு கிராமமும் நிதிசேகரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஆனால் 1933-ம் ஆண்டில் சமூக ஜனநாயகக் கட்சி தெரிவித்த யோசனைப்படி சமூக நலனபிவிருத்திச் சட்டங்கள் சிறுகச்சிறுக மாற்றப்பட்டும், திருத்தப்பட்டும் வந்தன. கடந்த 28 ஆண்டுகளில் பல சட்டங்கள் திருத்தப்பட்டதுடன் புதிய சமுதாய விருத்திக் கழகங்கள் நிறுவப்படுவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டன.

### இன்சூரன்ஸ் அமைப்பில்

டென்மார்க்கின் சமுதாய நலனபிவிருத்தி முறை இன்சூரன்ஸ் அமைப்பில் வகுக்கப்பட்டதாகும். ஒவ்வொரு சிப்பந்தியும் நோய்க்கால, வயதுக்கால, செயலாற்ற இயலாத கால, வேலையில்லாதகால பருவங்களுக்குரிய தொகையைச் சம்பளத்திலிருந்து கட்டிவர வேண்டும். ஒவ்வொரு சிப்பந்திக்கும் அவர் செலுத்தும் சந்தாத் தொகைக்குச் சமமாக முதலாளிகளும் செலுத்துகின்றனர். எனினும் பொது இன்சூரன்ஸ் திட்டத்தில் சேராதவர்களும் இருக்கின்றனர்.

அவர்களில் சுயமாகத் தொழில் நடத்தும் நிபுணர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் ஆகியோர் அடங்குவர். மேலும் நீண்டகாலம் வேலையில்லாமல் இருந்து விடுவதால் இன்சூரன்ஸ் சகாயங்களை இழப்போரும் இருக்கிறார்கள். அத்தகையவர்கள் ஸ்தல சமுதாயக் கண்காணிப்பு நிலையத்தில் கவனிக்கப்படுகின்றனர்.

தங்களுடைய சொந்தத் தவறுகளால் சகாயம் தேவைப்படும் நிலையில் உள்ளவர்களுக்கும் உதவி வழங்கப்படுகிறது. இத்தகையவர்கள் பட்டினியால் பரிதவிக்கக்கூடாது என்று கருதப்படுகிறது. சமுதாயக் கண்காணிப்பு நிலையங்களை நிர்வகிக்கும் மானேஜர்கள் சமூகப் பயிற்சிக் கல்லூரியில் பட்டம் பெற்றவர்களாய் இருக்கிறார்கள். உதவி கோர் வரும் சகல மனுக்களையும் பரிசீலனை செய்வது நிலையத்தின் மானேஜரே! சந்தேகத்துக்கு இடமான மனு ஏதும் வந்தால் மானேஜர் விசாரிக்கிறார். ஆனால் இப்படி நிகழ்வது வெகு சொற்பமே! நகரங்களில்தான் இப்படி.

### கிராமங்களில்

ஆனால் கிராமங்களில் உள்ள மானேஜர் கிராம மக்களை நேரிடையாக நன்கு அறிந்து வைத்திருக்கிறார். ஒவ்வொரு மனுதாரரையும் நன்கு பரிசோதித்த பின்னர் அத்தகையோருக்கு எவ்வளவு காலம் உதவி வழங்கப்பட வேண்டும் என்பதை மானேஜர் தீர்மானிக்கிறார். ஒரு சிலருக்குப் பணமாக அல்லாமல், உணவு உடை போன்றவை தேவைப்படுகிறது. சமுதாயக் கண்காணிப்பு நிலையங்களின் மானேஜர் ஒவ்வொருவரும் தங்களின் மாதாந்த அறிக்கையை உள்ளூர் நகராட்சி மன்றங்களுக்குச் சமர்ப்பிக்கின்றனர்.

சமுதாயக் கண்காணிப்பு நிலையங்கள் உள்ளூர் கழகங்களாக இருப்பதுடன் தங்களின் சொந்த பிராந்தியத்தின் ஆதரவுடன் இயங்குகின்றன. நகரத்திற்கு ஏற்றபடி அதன் வரவு செலவுகளுக்கேற்ப அரசாங்கம் மான்யம் வழங்குகிறது.

### நன்கொடையல்ல

நகரங்கள் அல்லது கிராமங்களின் வருவாய்கள் உள்ளூர் வரி விதிப்பின் மூலமே பெறப்படுவதால் சமூக நலனபிவிருத்திப் பணிகளும் வரிகள் மூலம் கிடைக்கும் வருவாயால் நிறைவேற்றப்படுகின்றன. ஒரு கிராமம் அல்லது நகரம் வறுமையானதாக இருந்தால் அல்லது போதிய வருவாயைப் பெறுததாக இருந்தால் மத்திய சமூக நலனபிவிருத்தி நிதியிலிருந்து மான்யம் வழங்கப்பட்டு பற்றுக்குறை சரிக்கட்டப்படுகிறது. ஆனால் இப்படி அடிக்கடி நிகழ்வதில்லை. சமுதாய நலனபிவிருத்தித் துறையில் வழங்கப்படும் உதவி வெறும் நன்கொடையல்ல! கடனகவே வழங்கப்படுகிறது. உதவி பெறுவோர் தாங்கள் நல்ல நிலைக்கு வந்ததும் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதனை வரியாகச் செலுத்தலாம். போதிய வருவாய் இருந்தும் முன்பு உதவியாகப் பெற்ற தொகையைச் செலுத்த யாரும் மறுத்தால் அத்தகையவரிடமிருந்து நிர்ப்பந்தமாக வசூலிக்கச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

### கஷ்டகாலத்தில் உதவி

உதவி பெறும் நபர் நிரந்தரமாகவே திரும்பச் செலுத்த இயலாது போனால் சமுதாயக் கண்காணிப்பு நிலையம் அத்தகையவரது கணக்கைச் செலவில் சேர்த்துவிடும். தனிநபர் தங்களின் கஷ்டகாலத்தில் உதவி பெறுவதே இத்தகைய திட்டத்தின் லட்சியமாகும்.

சமுதாயக் கண்காணிப்பு நிலையங்களின் சலுகைகளைத் துஷ்பிரயோகம் செய்வோரும் உண்டு. ஆனால் அவர்களின் எண்ணிக்கை வெகு சொற்பமே! டென்மார்க்கை விட பொருளாதாரத்தில் வளம் குன்றிய இதர நாடுகள் இந்த முறையைப் பின்பற்றலாம். இத்துறையில் டென்மார்க் சொர்க்கலோகமாக இல்லாவிட்டாலும், நோய், பசி, வீடு பற்றுக்குறை ஆகியவை இல்லாமல் திருப்தி உணர்ச்சியுடன் விளங்குகிறது

# விளையாட்டுத் துறையில்

## 6 புதிய உலக சாதனைகள்

கடந்த சில வாரங்களில் ஆறுக்குக் குறையாத புதிய உலக சாதனைகள் விளையாட்டுப் போட்டிகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

24-6-61-ல் ஐக்கிய அமெரிக்காவில் பென்ஸில்வேனியா மாகாணத்தில் உயர்தரக்கல்வி பயிலும் 21 வயது நிரம்பிய நீகிரோ இனத்தைச் சேர்ந்த பிரான்க்பட் என்ற விளையாட்டு வீரன் 100 யார் தூரத்தை 9.2 விநாடியில் ஓடி ஒரு புதிய உலக சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார். இதனால் இவரே "உலகிலுள்ள வேகமாக ஓடக்கூடிய மனிதர்" என்று கணிக்கப்படுகிறார். இதற்கு முன்பு 9.3 விநாடியாக இருந்த சாதனை முதன்முதலாக 1948ல் ஏற்படுத்தப்பட்டது. குறைந்தது ஒன்பது வீரர்கள் இச்சாதனையை கடந்த 12 ஆண்டுகளில் சமப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீளம் பாய்தலில் 1960 ஆகஸ்டில் 26 அடி 11 1/4 அங்குல தூரத்தைத் தாண்டி உலகசாதனையை நிலைநாட்டிய ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ரால்ப் பொஸ்ரன் என்பவர் 27-5-61ல் 27 அடி 0 1/2 அங்குல தூரத்தைப் பாய்ந்து தமது உலகசாதனையை முறியடித்திருக்கிறார். 19-6-61-ல் 27 அடி 0 1/4 அங்குலத்தைத் தாண்டி மீண்டும் தமது கடந்த வருட சாதனையை முறியடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உயரம் பாய்தலில் ரஷ்யாவைச்சேர்ந்த வலறி புறூமை என்ற வீரர் 19-6-61-ல் 7 அடி 3 3/4 உயரத்தைத் தாண்டி கடந்த வருடம் ஜுலை மாதத்தில் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் தொமஸ் என்பவர் நிலைநாட்டிய உலகசாதனையைச் சமப்படுத்தியிருக்கிறார்.

1-6-61 ல் இத்தாலியைச் சேர்ந்த காளோ லேவோர் என்பவர் ஈட்டியை 284 அடி 5 3/4 அங்குல தூரத்திற்கு வீசி பழைய உலகசாதனையை 2 அடி 2 1/4 அங்குலத்தினால் முறியடித்திருக்கிறார். பழைய உலக சாதனையாகவிருந்த 282 அடி 3 1/2 அங்குலம் 5-6-59 ல் ஏ. கன்ரெலா என்ற அமெரிக்க வீரரால் ஏற்படுத்தப்பட்டது.

பெண்களும் கூட இரண்டு புதிய உலக சாதனைகளை ஏற்படுத்தியுள்ளனர். உயரம் பாய்தலில் முதன்முதலாக 6 அடி உயரத்தைத் தாண்டிய ருமேனியா நாட்டைச் சேர்ந்த அயோலன்டா பாலாஸ் என்ற

(8-ம் பக்கம் பார்க்க)

### ஐயாறன் எழுதுவது

நேற்றுக் காலை கொழும்பிலிருந்து ஓர் அன்பர் யாழ்ப்பாணத்துக்குப் பறந்து வந்தார். கொழும்பிலே காற்றும் மழையும் கலந்து அடிக்கிறதாம். அதனால் விமானம் கூடத் தவக்கமாகப் புறப்பட்டதாயும் தெரிவித்தார்.

ஆனால் இங்கு காற்று அடிக்கிறதென்றாலும் மழையையே காணோம். அடிக்கும் காற்றில், ஒரு பள்ளிக்கூட கொட்டகை கூடக் கீழே புரண்டு சில மாணவர்களுக்குக் காயம் பட்டது. நல்ல வேளையாக உயிர்ச் சேதமெதுவுமில்லை.

இதைப்பற்றி ஓர் அன்பரைக் கேட்டேன். கொட்டகை வேலை எல்லாம் போலி என்றும், கொந்தராத்துக்காரர்கள் இக்காலத்தில் இப்படித்தான் வேலை செய்வதாகவும் சொன்னார். இதற்கு என்ன செய்யலாம்?

* * *

யாழ்ப்பாணத்திலே மற்றொரு பள்ளிக்கூடத்திலே உடைந்திருந்த ஒரு தூண் அங்கு விளையாடிய ஒரு மாணவர்மீது விழுந்து உயிர்ப் பலி வாங்கி விட்டது. மரண விசாரணை நடத்திய அதிகாரி, அப்பாடசாலையினர், இவ்வித ஆபத்தான முறையிலே பாடசாலையை வைத்திருந்ததைக் கண்டித்தார்.

ஆனால் பள்ளிக்கூட தலைமை ஆசிரியர்களுக்கோ ஆயிரம் வேலை. அவர்கள் என்னவென்று பார்ப்பார்கள். ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும், பெற்றோர், பிரமுகர்களடங்கிய க்ஷேமநல சபையை அமைத்து, அச்சபைக்கு இவ்வித பொறுப்பெல்லாம் இனி தவக்கமில்லாமல் அளிக்க வேண்டும்.

எல்லாப் பள்ளிக்கூடங்களையும் அவசரமாகத் தம் பொறுப்பில் எடுத்துக் கொண்ட கல்வி மந்திரி இதுபற்றி இனியும் கவலையீனமாக இருக்க முடியாது.

* * *

நடப்பது ஆனி மாதம்தான் என்றாலும் ஆடிவேல் உற்சவப் பத்திரிகை கொழும்பிலிருந்து கிடைத்தது. செட்டியார் தெரு பழைய கதிர்வேலாயுதசுவாமி கோவிலார்கள் இம்முறை உற்சவம் நடத்துகிறார்கள். அங்கு இரண்டு வேலாயுதர் கோவில்கள். பக்கத்துக்குப்பக்கம். ஒருவருடம் மாறி ஒருவருடம் இரு கோவிலார்களும் உற்சவத்தை நடத்தி வருகின்றனர்.

இம்முறை இந்தியாவிலிருந்து கே. பி. சுந்தராம்பாள் அவர்கள் வருவதாக அறிந்தேன். அடுத்தமாதக் கடைசியில் கொழும்பிலே பக்தி மயமான கானங்கள் சக்கைபோடு போடும். வானொலிமூலம் இங்கிருந்தே கேட்கலாம்.

சென்றமுறை ரமணி அம்மாள் வந்து, பஜனைக் கச்சேரிகள் செய்து ஜமாய்த்துவிட்டார். அப்பாடல்கள் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இந்த முறை சுந்தராம்பாளின் தேவகானம். சொல்ல வேண்டுமா?

கொழும்புவரும் சுந்தராம்பாளவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருவாரா? என்று ஓர் அன்பர் ஆவலுடன் கேட்கின்றார். இச்சமயம் அவர் இங்கு வந்து கான மழை பொழிந்தால், சோர்வுற்றுள்ள நம் உள்ளங்கள் குளிருமல்லவா? எப்படியும் அவர் இங்கு இரண்டொரு நாளாவது வந்துசெல்ல வேண்டுமென்று இப்போதே கூறி வைக்கின்றேன்.

கொழும்பு செம்மாங்கோடு கதிர்வேலாயுத சுவாமி கோவிலார்கள், இம்முறை ஆடிவேலுக்கு காருகுறிச்சியாரையும், வண்ணை முத்தமிழ் மணியையும் வரவழைக்கப்போகிறார்களாம். பலே சபாஷ்!

# தலைமை ஆசிரியர் மீது ரூ. 25,000 நஷ்ட ஈடு கோரி வழக்கு

## விசாரணை 25ம் திகதி ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்

வட்டுக்கோட்டைச் சிவன் கோயிலடியில் வசிக்கும், மறைஞான சம்பந்தர் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியரான திரு. கே. கந்தசாமியின் மேல் ரூபா 25,000 நஷ்டஈடு கோரி சைவ வித்தியாவிருத்திச் சங்க மனேஜர் திரு. சி. சுப்பிரமணியத்தால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாண மாவட்டக் கூட்டு நீதிபதி திரு. சி. தனபாலசிங்கத்தின்முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கில் எதிரியாகக் கண்டிருக்கும் திரு. கே. கந்தசாமி 20 ஆண்டுகளாக வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலையில், தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி வந்தவர். இவர் யாழ்ப்பாணக் கல்வி அதிகாரியின் அனுமதியுடன் முரசுமோட்டையில் இருக்கும் முருகானந்தா வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். எதிரி அதிக தூரம் பிரயாணம் செய்ய முடியாது என்று தெரிவித்ததன் பேரில், இடமாற்ற உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது. கடைசியாக 1-9-60 ல் இருந்து எதிரி தன் வீட்டிலிருந்து ஒவ்வொரு நாளும் வசதியாகப் போய்வரக் கூடிய பள்ளிக்கூடத்துக்கு, கல்வி அதிகாரியின் அனுமதியுடன் மாற்றப்பட்டார். ஆனல் எதிரி என். கந்தசாமிவிடுத்த அறிக்கையில், வழக்காளி சி. சுப்பிரமணியம் சைவவித்தியாவிருத்தித் தலைவர் என்ற முறையில் அதிகாரத்தைப் பாவித்து, தன்னை வலுக்கட்டாயமாக, நேர்மையற்ற முறையில் இடமாற்றம் செய்தார் என்று அறிவித்திருந்தார்.

எதிரி பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை புரக்டராகவும் பிரசித்த நொத்தாரிஸாகவும் கடமையாற்றும் தன்னுடைய அந்தஸ்தைப் பாதித்திருப்பதாக திரு. சி. சுப்பிரமணியம் ரூபா 25,000 நஸ்டஈடு கோரி திரு. எஸ். கந்தசாமிமேல் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

வழக்காளி சார்பாக திரு. முத்துக்குமாருவின் அனுசரணையுடன் திரு. பொன்னையா, திரு. கதிர்காமலிங்கம், எஸ். ஆர். கனகநாயகம் ஆகியோர் ஆஜரானர்கள்.

எதிரிதரப்பில் திரு. எஸ். சூரசங்காரம், திரு. ஜே. டி. ஆசீர்வாதம், திரு. திருநாவுக்கரசு ஆகியோர் திரு. வி. எஸ். சோமசுந்தரத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்கள்.

அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டகுற்றச்சாட்டுக்களை மறுத்திருப்பதோடு, கல்வி இலாகா டைரக்டருக்கு எழுதிய கடிதங்கள், தனக்கு உள்ள சலுகை என்றும் அப்படிச் செய்வது தனக்குள்ள உரிமையென்றும் எதிரிதரப்பில் சொல்லப்பட்டது.

மேற்கொண்டு விசாரணை செப்டம்பர் 25–27 ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 'தலைக்கு ஒரு ரூபாய்' இலங்கையில் புதிய இயக்கம்

திருக்கோணமலை, ஜூன் 29

"இந்த மாவட்டத்தில் 250 சேமிப்புப் பகுதிகள் இருக்கின்றன. சென்ற நிதிவருடத்தில் ரூ. 80,000 சேருமென எதிர்பார்த்ததற்கு மேலாக ரூ. 40,000 சேர்ந்திருக்கிறது." இவ்வாறு தேசிய சேமிப்பு மாவட்ட மேற்பார்வையாளர் திரு. சி. வி. கிருபாலரத்தினம் சேமிப்பாளர் சங்கக் கூட்டத்தில் கூறினர். மாணவர்களுக்காகத் தான் ஆரம்பித்து வைத்த போட்டி வெற்றியடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய சேமிப்பு உதவிக் கமிஷனர் திரு. எல். டபிள்யூ. குணவர்த்தன பேசுகையில் கூறியதாவது;

"பயிரிடுவோர் சேமிப்புத் திட்டத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். இத்திட்டத்தின் வெற்றிக்கு விவசாயப் பகுதி உதவிக் கமிஷனர், கூட்டுறவுச் சங்க உத்தியோக்ஸ்தர்கள், மாவட்ட வரி அதிகாரி ஆகியோரின் ஒத்துழைப்பும் அவசியமாகும். கடாவத்தைத் திட்டம் ஊக்கக் குறைவால் வலுவற்றுப் போய்விட்டது. கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் அத்திட்டம் சிறப்பாக விளங்கும்".

"தலைக்கொரு ரூபாய் என்று மாணவருக்கு ஓர் இயக்கத்தை ஆரம்பிப்பது பற்றிய பிரேரணை சிறிது மாற்றங்களுக்குப் பின் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## சிங்கள தட்டெழுத்தாளர் பட்டியல் தயாரிக்க உத்தரவு

கொழும்பு, வியாழன்

போதிய சிங்களத் தட்டெழுத்தாளரும் சுருக்கெழுத்தாளரும் இல்லாதபடியால் அரசாங்கத்தினரது சிங்கள அரசகரும மொழிக் கொள்கையைச் சமாளிக்க முடியாதிருக்கின்றது எனப் பல இலாகாக்கள் அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கின்றன.

சிங்களத் தட்டெழுத்துக் கருவிகள் தம்மிடம் இல்லையெனப் பல இலாகாக்கள் முறையிட்டுள்ளன.

ஒரு மாதிரியான தட்டெழுத்துக் கருவியில் பழகியவர்கள் இன்னுமொருவகையான தட்டெழுத்துக் கருவியை உபயோகிப்பது இலகுவல்ல என்று இதற்கு முன்னர் முறையிடப்பட்டது. அரசாங்கம் வாங்கியுள்ள தட்டெழுத்துக் கருவிகள் பல உபயோகிப்பாரின்றிக் கிடக்கின்றன. இவற்றில் பயிற்சி பெற்றோர் மிகச் சிலரேயாவர்.

சிங்களத் தட்டெழுத்தாளர் பதவிக்கு நியமிப்பதற்கென அனுமதிக்கப் பெற்றவர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும்படி, திறைசேரி நிரந்தரக் காரியதரிசிகளையும், இலாகாத் தலைவர்களையும் கேட்டுள்ளது.

## முட்டைகள் தாமாக குஞ்சுபொரித்தன

ஜெய்ப்பூர், ஜூன் 29

பார்மார் ஜில்லாவிலுள்ள பலோத்ஜா என்ற கிராமத்தில் வசிக்கும் வீட்டுக்காரர் ஒருவர், சில முட்டைகளை தமது கல் அலமாரி ஒன்றுக்குள் வைத்துவிட்டு அவ்விஷயத்தையே மறந்துவிட்டார். சில தினங்களுக்குப் பிறகு அந்த அலமாரியைத் திறந்துபார்த்தபோது, அங்கு வைத்த அம் முட்டைகளுக்குப் பதில் கோழிக்குஞ்சுகள் இருந்தன.

இந்த அதிசயமான மாற்றத்தைக்கண்டு வியப்படைந்த அந்த வீட்டுக்காரர், கிஷோர் கரண் அறை அலமாரிக்களின் உஷ்ணநிலை காரணமாகத்தான் அந்த முட்டைகள் குஞ்சுகளாக மாறியிருக்கவேண்டும் என்று கூறினர்.

## அதிசய முட்டைகள்

அளுத்காமம், வியாழன்

அடிகரிகொடையைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான ஒரு கோழி ஆறங்குல நீள முள்ள வாலுடன் ஒருமுட்டைஒன்றை இட்டிருக்கிறது.

தர்கா நகரில் ஒரு வாத்து சிறிய பறவையினுடைய முட்டைபோன்று ஒரு சிறிய முட்டையொன்றை இட்டிருக்றது.

## நீர்கொழும்பு மீன்பிடி பயிற்சிக் கல்லூரி

கொழும்பு, வியாழன்

நீர்கொழும்பில் ஜப்பான் உதவியுடன் நிறுவ இருக்கும் மீன்பிடி பயிற்சிக் கல்லூரியில் ஒஉவொரு வருடமும் 100பேர்களைப் பயிற்றுவிக்க மூன்பிடி இலாகா தீர்மானித்துள்ளது.

ஒரு தடவையில் 20பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். இத்துறையில் அனுபவம் உள்ளவர்களே தேர்ந்தெடுக்கப்படுவர்.

இவர்களுக்கு பயிற்சி வகுப்புகளும், போதன வகுப்புகளும் நடத்தப்படும்.

ஜப்பானிய நிபுணர்களே இவர்களுக்குப் பயிற்சியளிப்பார்கள் பயிற்சிக்கல்லூரிக்குத் தேவையான உபகரணங்களை ஜப்பான் உதவும்.

## ஆலய வழி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மனதில் உதிக்கின்றன. இவ்வாலயங்கள் சிறந்து விளங்க வேண்டுமானல், நம்போன்ற கிராம மக்கள் ஒன்றுபட்டு ஊக்கத்துடன் செயலாற்றவேண்டும் என்று கூறினர்

மகாசபையின் அங்கத்தினரான திரு. ச. சுப்பையா பின் வருமாறு குறிப்பிட்டார்:-

நமது கிராம மக்களிடையே பாகுபாடு வேற்றுமைகள் பெருகிவந்துகொண்டே யிருக்கின்றன. இதனைப் போக்கி, கிராமமக்களை நல்வழியில் கொண்டுவர பல சங்கங்களும் பாடுபடவேண்டும். துன்பத்தில் துவளுவதை விட்டு, இன்பத்தில் நாமெல்லோரும் வாழவேண்டுமானல் அன்பின் பிணைப்பில் நாமெல்லோரும் ஐக்கியத்தை வளர்ப்பதில் ஈடுபடவேண்டும்."

திரு. சி. வ. நடராசா, முதலியார் குல சபாநாதன், திரு .ச. சிவசம்பு ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

# லொறியால் மோதி மரணம் விளைவித்தாராம்

## சாரதிக்கு வாரண்ட்

யாழ்ப்பாணம், வியன்ழ

மண்கும்பானில் இருக்கும் நாகநாதர் என்று அழைக்கப்படும், சின்னத்தம்பி சின்னையா மீது லொறியால் மோதி அவருக்கு மரணம் விளைவித்த குற்றத்திற்காக. நாகநாதன் நாகேசு என்பவரை ஊர்காவற்றுறை நீதிபதிமுன் ஆஜர் செய்யும்படி யாழ்ப்பாணத் திடீர் மரணவிசாரணை அதிகாரி, எஸ். கனகரத்தினம் வாரண்ட் பிறப்பித்துள்ளார்.

மண்கும்பானைச்சேர்ந்த விநாசித்தம்பி சின்னையா சாட்சியம் அளிக்கும்போது, இறந்தவரும் நாலும், ஊர்காவற்றுறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததாகவும், இறந்தவர் தெருவில் இடது பக்கத்திலும், தான் வலது பக்கத்திலும் நடந்துகொண்டிருந்ததாகவும் கூறினர்.

அவர் மேலும் தொடர்ந்து சாட்சியமளித்த போது கூறியதாவது:-

லொறி எங்களை கடந்து சென்றபோதும், நாகநாதர் விழுந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். நான் நாகநாதரை நெருங்கிப் பார்த்ததும் அவரின் மூக்காலும், மண்டையாலும் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. லொறி நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது. நான் சத்தம் போட்டேன். சிலர் விபத்துநடந்த இடத்தில் கூடிவிட்டார்கள்.

அந்த வழியால் வந்துகொண்டிருந்தகாரில் ஏறி லொறியைத் தொடர்ந்தேன். பிரஸ்தாப சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 2 மைலுக்கு அப்பால் லொறியை மறிக்க முடிந்தது. லொறிச் சாரதியிடம் அவர் ஒரு ஆளை நாரந்தனையில் அடித்துவிட்டு வந்திருப்பதாகச் சொன்னேன். சாரதிலொறியை விட்டு இறங்கி, ஊர்காவற்றுறையை நோக்கிச் சென்றர். நான் சம்பவம் நடந்த இடத்திற்கு திரும்பிப்போய் காரில் காயமடைந்தவரை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன்.

ஆஸ்பத்திரியில் காயமடைந்த நாகநாதர் 4 நாட்களுக்குப் பின் இறந்தார்.

ஊர்காவற்றுறை பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் அரசரட்ணமும் நாரந்தனை மிருக வைத்தியர் திரு. செல்லையா போல் அன்ரனியும் சாட்சியம் அளித்தார்கள்.

## கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகராலய மகோற்சவம்

காத்தான்குடி, வியாழன்

பழம்பெருமை வாய்ந்த கல்லடி, உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகராலய வருடாந்த மகோற்சவம் இவ்வருடம் சிறப்பாக நடைபெற்றது. சமயச் சொற்பொழிவும் கூட்டுப்பிரார்த்தனையும் ஒழுங்காக இடம் பெற்றது. இறுதித் தினத்தன்று நடைபெற்ற தீமிதிப்பு வைபவத்தில் அதிக பக்தர்கள் கலந்துகொண்டனர்.

## ரூபாயின் மதிப்பு குறைகிறதாம்

வெலிகாமம், வியாழன்

"ஒரு ரூபாயின் மதிப்பு இன்று 50 சதத்துக்குக் குறைந்துவிட்டது. இன்னும் ஒரு வருட காலத்திற்குள், ஒரு ரூபாயின் மதிப்பு 25 சதத்துக்குக் கூட குறைந்துவிடலாம்"என்று ஹல்லலவில் நடந்த ஒரு கூட்டமொன்றில் பேசுகையில் வெலிகமாம் எம். பி. திரு. மொண்டேகு ஜயவிக்கிரமா குறிப்பிட்டார்.

டென்னிஸ்

## கிருஷ்ணன் மீண்டும் வெற்றி

லண்டன், ஜூன் 29

இந்தியாவைச் சேர்ந்த ராமநாதன் கிருஷ்ணன் இன்றைய விம்பிள்டன் டென்னிஸ் ஒற்றையர் ஆட்டப் போட்டின்ல் இத்தாலிய வீரர் ஜி. மெர்ஜோவைத் தோற்கடித்தார்.

புள்ளிவிபரம்: 6—4, 3—6, 6—3, 6—1.

## பயிற்சிக்காலம் நீடிப்பு

முள்ளியவளை வியாழன்

கிருஷிக இலாகா அதிபரினல், எல்லாக் கிருஷிக பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் ஆகஸ்டுமாதம் முடியவேண்டிய பயிற்சி மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்படல்வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

## திலகர் மறைந்து 41 ஆண்டுகள்

புதுடில்லி, ஜூன் 29

இன்று லோகமான்ய பால கல்காதர திலகர் காலமான 41 வது ஆண்டு தினம். ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத் அவரது சிலைக்கு மலர் மாலை சூட்டி மரியாதை செய்தார்.

## சர்வதேச தொழில் ஸ்தாபன மகாநாடு

ஜெனிவா, ஜூன் 28

சர்வதேசத் தொழில் ஸ்தாபன மகாநாடு ஜெனிவாவில் நடைபெறுகிறது.

வாரம் ஒன்றிற்கு 40 மணிநேர வேலையாகக் குறைக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் நேற்று சபையில் அங்கீகாரம் பெற்றது. வர வர வழமையான நேரம் குறைக்கப்பட்டு இந்த ஏற்பாட்டைக் கொண்டு வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. தொழிலாளர் பிரதிநிதிகள் இதை ஆதரித்து வாக்களித்தனர். முதலாளிமார் பிரதிநிதிகள் எதிர்த்து வாக்களித்தனர்.

## ஐ. நா. வில் கொழும்பு மேயா

நியூயார்க், ஜூன் 29

கொழும்பு மேயர் திரு. எம். எச். மொஹமட் உட்பட நாற்பது நாடுகளைச் சேர்ந்த 410 மேயர்களும், உள்ளூராட்சி அதிகாரிகளும் ஐக்கிய நாடுகள் சபைக்கு விஜயம் செய்தனர்

இவர்கள் அனைவரும் சர்வதேச உள்ளூராட்சி யூனியனின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளாவர். இவர்கள் பங்கு பற்றிய சர்வதேச உள்ளூராட்சி வருடாந்த உலக மகாநாடு இப்பொழுதுதான் முடிவுற்றது.

ஐ.நா. தலைமைக் காரியாலய பிரதம வாயிலுக்கு வந்து சேர்ந்ததும் இவர்கள் மகாநாடு நடைபெறும் அறையொன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு பொது நிர்வாகப் பிரிவு டைரக்டர் திரு. எஸ். பி. பார்ட் அனைவருக்கும் வரவேற்புப் பத்திரம் அளித்த பின்னர் பிரதிநிதிகள் 25 பேரைக் கொண்ட குழுவாகப் பிரிந்து ஐ. நா. காரியாலயத்தைப் பார்வையிட்டனர்.

காங்கோ பார்லிமெண்ட் கூடுவது அடுத்த மாதம்வரை ஒத்திவைக்கப் பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

# மங்கையர் உலகம்

## இனிமை, இரக்கம் தியாகம் இத்தனையும் தாய்மையின் இலட்சியம்

— வாலாம்பிகை —

இறைவன் பெண்ணை சிருஷ்டித்தார் அன்றிலிருந்து உலகில் பெருவெளி நீங்கிற்று என்ருர் அறிஞர் நீட்ஷே. இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை என்பது தமிழ் முதுமொழி. இருண்ட இல்லத்தை ஒளிமயமாக்கும் சக்தி படைத்தவள் பெண். இதனுல்தான் பெண்ணை குல விளக்கு என்கிருர்கள்.

இத்தகைய பெருமைவாய்ந்த பெண்களிற் சிலர் எதற்காக ஒளிமங்கி வாழவேண்டும்?

பெண்ணை இறைவன் படைத்தது வெறும் அலங்கார வாழ்வை அவள் நடத்துவதற்கு அல்ல. உலகில் அன்பு, அமைதி, அறம் இவற்றைப் பேணி மக்களை நல் வாழ்வு வாழத் துணைபுரிவதற்காகவே இறைவன் அவர்களைப் படைத்தான். இனிமை, இரக்கம், கருணை, தியாகம் இத்தனையும் பெண்மையில் சேர்ந்திருக்கின்றன. அவற்றைக் கொண்டு உலக வாழ்வுக்கு உறுதியான ஒரு நல்ல அஸ்திவாரம் அமைக்க பெண்கள் முன்வர வேண்டும்.

கஸ்தூரிபாய், காந்திஜிக்குத் துணையாயிருந்தார். வள்ளுவர் வழிவாழ்ந்தார் வாசுகி. பரமஹம்சர் பக்திநெறியோடு வாழ உறுதுணை புரிந்தார் சாரதா தேவி அம்மையார். கடமை மறவாது கண்ணிய வாழ்வு வாழ்ந்து உலக மக்கள் தெய்வமாகத் தொழக் கூடிய தகுதி பெற்ருர் காரைக்கால் அம்மையார்.

இவர்களின் சரிதை இக்காலத்துக்கு உதவாது என்று பெண்மணிகளிற் சிலர் எண்ணலாம். ஆனுல் உள்ளத் தூய்மையின்றி புனிதமான கடமை செய்யாது வாழ்ந்தவர்களின் வாழ்க்கை எவ்விதம் சீர்குலைந்து போகின்றது என்பதைப் பார்த்தால் தூய வாழ்க்கையைப் பின்பற்றவே மனம் தூண்டும்.

வீட்டில் வேலை செய்வதையோ கணவனுக்குதொண்டு செய்வதையோ பெரும் பாரம் என்று எண்ணுபவர்கள் வாழ்விலேயே இன்பம் அனுபவிக்க முடியாது. சாந்தியில்லாது சலனமுற்று சஞ்சலமடைய வேண்டிவரும்.

பிறருக்கு அன்பு செய்வதில் நாம் ஆறுதலடைய வேண்டும். செய்யும வேலை எதுவாகஇருந்தாலும் அது சேவை என்ற எண்ணத்தோடு நாம் செய்யப் பழகிக் கொண்டோமானுல், நம் வாழ்க்கை ஒளி பெறும். உலகம் பயனடையும்.

### பெண்களுக்கு பதவிகள்

மேற்கு ஜேர்மன் ராஜ்யமான ஹெஸ்ஸேயில் நடைபெறும் சமுதாய நல முறைகளை நேரில் அறிந்துகொள்வதற்காக பிரதி வாரமும் அயல் நாட்டினர் யாராவது வருவதும் போவதுமாக இருக்கின்றனர். இது பற்றி கிரீஸ், யூகோஸ்லேவியா, துருக்கி, ஆப்பிரிக்கா நாடுகள் ஆகியவைகளில் பேசப்படுகிறது. ஹெஸ்ஸேயிலுள்ள கிராம சமுதாய அமைப்பை இதர ஜேர்மன் ராஜ்யங்களும் பின்பற்ற ஆரம்பித்துள்ளன.

ஹெஸ்ஸேயில் கிராம அமைப்பு ஏற்பாடு பத்துவருஷங்களுக்கு முன்னர்தான் ஆரம்பமாயிற்று. சமுதாயநலப் பொது இடங்கள் அமைக்கப்படலாயின. கிராம வாழ்க்கையைச் சீர்படுத்தவேண்டும் என்ற ஆவலின் அடிப்படையாகவே அமைப்பு உருவாயிற்று. கிராம வாழ்க்கையின் முக்கிய இடமாகவும் கலாசாரவாழ்க்கை பிரதிபலிப்பாகவும் சமுதாய ஸ்தாபனங்கள் விளங்கின. ஹெஸ்ஸே ராஜ்யத்தில் மட்டும் 160 க்கு மேற்பட்ட சமுதாய நிலையங்கள் செயல்பட்டுவருகின்றன.

ஹெஸ்ஸேயிலுள்ள மற்றொரு முக்கியமான அம்சம் பெண்களுக்கு முக்கியமான பதவிகள் அளிக்கப்பட்டிருப்பதே. கிராம, சமுதாய நிர்வாகத்தில் மிக பொறுப்புள்ளபதவிகளை அவர்கள் ஏற்று திறம்பட நிர்வகிக்கின்றனர். வேறு எந்த மேற்கு ஜேர்மன் ராஜ்யத்திலும் ஹெஸ்ஸேயிலுள்ளதுபோல் அவ்வளவு பெண்கள் அரசியல் துறையில் ஈடுபட்டிருக்கவில்லை. பார்லிமெண்ட் ஸ்தானங்களிலும், கிராமசபைகளிலும் பெண்களே அங்கத்தினர். நகரசபைகளில் 216 பெண்கள் பொதுஜன வாக்குப்பெற்று அங்கத்தினராக இருக்கின்றனர். அநேக வருஷங்களாக ஒரு பெண்ணே மேயராக இருந்துவருகிருர்.

---

### உண்மை அழகு

அழகாக விளங்குவதற்கு இவ்வளவு நகை, இவ்வளவு உடை இருந்தால் போதும் என்று ஒரு வரையறை— குறைந்த அளவு – ஏற்படுத்திக் கொண்டு கவலையில்லாமல் வாழக் கற்றுக் கொள். அதுபோதும். ஆடம்பரம் இருந்தால்தான் அழகு இருக்கும் என்னும் உலகத்தாரின் மூட நம்பிக்கையைப் பொய்ப்படுத்திக் காட்டு. —மு. வ.

---

## ஒட்டுத்துணியும் உடுக்கும் விதத்தில் பாஷன் ஆகிறது!

ஒரு காலத்தில் ஆடைகள் மனித இனத்தின் மாண்புடைய மானத்துக்காகவே பயன்பட்டு வந்தன. ஆனுல் இன்ரே ஆடை உடலுக்காக மட்டுமல்லாமல், உயர்வான அந்தஸ்துக்காகவும், அழகுக்காகவும், ஏன் - கவர்ச்சிக்காகவும், விதவிதமான நூதன பாணிகளில், பலரக செயல் முறைகளில் கையாளப்படுகின்றன. ஆகவே, இவைகளை அணியும் ஆரணங்குகளும் முடிசூடா மகளிர்களாகவே திகழவும் செய்கின்றனர். இந்த முற்றிய நாகரிக முற்போக்கு, காலத்திற்கு ஏற்றவாறு பல்வேறு விதமாக மாறுபடுகின்றன.

இருப்பினும் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற பண்பான முறைதான் என்றுமே நாட்டில் நடைமுறையாகி வருகின்றன. உதாரணமாக, நமக்குத் தெரிந்த வரையில் சில காலங்களுக்கு முன்பெல்லாம் வயது வந்த தாய்மார்கள் தங்கள் முழங்கைக்குச் சற்றுத்தாழ்ந்தே ரவிக்கை என்ற உடையை அணிந்ததையும், சிலவிதமான கட்டங்கள், வரிகள் போன்றவற்றுல் நெய்த குறைந்தது 16 முளப் புடவைகளையாவது உடுத்தி வந்ததைப்பற்றியும் நாமறிவோம். ஆனுல் இள நங்கையர்களோ சற்றுத் தோள்பட்டைக்குக் கீழோ, அல்லது தோள்பட்டைக்கு மேலோ ரவிக்கைகளை அணிந்ததுடன், நூதன மெல்லிய புடவைகளை அணிய ஆரம்பித்து, அதை 12 அல்லது 10 முழங்களில் கொண்டு வந்து நிறுத்தி விட்டனர் என்பதையும் நாமறிவோம். இவையாவுமே காலத்துக்கேற்ற நாகரிக முறையே ஆனுலும், இன்ரே ரவிக்கைகளை அணிதலிலும், புடவைகளை உடுத்துவதிலும் அந்தக்கால முறைப்படி (ரவிக்கையை முழங்கைக்குக் கீழே சோளி என்ற பெயருடன்) அணிவது பாராட்டப்பட வேண்டிய ஒன்ருகும். இம்முறையைப் போன்றே நாட்டில் நல்லவைகளே காலப்போக்கில் நிலைத்து விடுமென்றும் முடிவு செய்யலாம்.

மேலும் நாகரிக வளர்ச்சியில் எம்மாதிரியான முறைகள் தான் கையாளக்கூடும், கையாளக்கூடாது என்ற விதிமுறைகள் எதுவும் கிடையாது போலும். ஏனெனில் இன்று அரிய பெரிய செல்வந்தர்கள் இல்லத்தினர்களையும் அலங்கரிப்பது பல வண்ணவெட்டு, ஒட்டுத் துணிகளாலான அதன் தையல் முறைகள் தான். ஆனுல், அதே முறையைப் பல காலமாகக் கையாண்டு வரும் வழியற்ற ஏழை எளியவர்களிடமிருந்து இந்த நாகரிகமுறை ஒட்டிக்கொண்டதோ என்னவோ...! மேலும் நரிக்குறத்திகள் என்றுமே வெட்டு, ஒட்டு வண்ணத் துணிகளைத்தான் இணைத்து ஆடைகளாக அணிகின்றனர் என்பதையும் உதாரணமாகக் கூறலாம். இருப்பினும், செல்வந்தர்கள் அணியும் விதத்தில் சாதாரண ஒட்டுத் துணிகள் பெரிய 'பாஷனு'கப் போய்விடுகிறது.

— 'கலைமலர்'

### நவீன பால் ஆலை

திருவனந்தபுரம், ஜுன் 29

நவீன முறையில் பாலைச் சுத்தம் செய்து போத்தலில் அடைக்கும் புதிய ஆலையொன்றை கேரள கவர்னர் திரு வி. வி. கிரி நேற்று திருவனந்தபுரத்தில் ஆரம்பித்து வைத்தார். இந்த நவீன சாதனங்கள் அமெரிக்க அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டவை.

---

## பெண்கள் துணிந்தால்..

—'புதுமைப்பெண்' —

சீதனம் இல்லாவிட்டால் திருமணம் இல்லையா? என்ற புரட்சிகரமான கேள்வியை சகோதரி 'திருமகள்' சென்ற வாரம் கேட்டிருக்கிருர். எண்ணிறந்த இளம் பெண்களுக்குப் புதுவாழ்வு அளிக்கத் தன் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்ய முன்வந்திருக்கிருர், அவர். ஆனுல் அவர் கூறிய படி மானங் கெட்ட பிழைப்பு நடக்கிறதா! சீதனம் வாங்குவதற்குப் பெண்களும் துணை புரியவில்லையா?

ஒரு சிறு சம்பவம் என்னை இப்படி எல்லாம் எண்ண வைக்கிறது. எனது பெரிய அண்ணன் பட்டதாரி. மிகவும் நல்ல குணம் படைத்தவர். ஆனுல் சாதாரண உத்தியோகம்தான் பார்க்கிருர். வெகு காலமாகப் பெற்ரேர் நிச்சயித்திருந்த பெண்ணை மணம் முடிப்பதாகத்தான் இருந்தார். பெண்ணின்பெற்ரேருக்குத்திடீரென்று யோகம் அடித்தது. விளைவு என்ன தெரியுமா? அவர்கள் செல்வ நிலைக்கு அண்ணன் சரியாக இருக்கவில்லை. பெருந் தொகைப் பணத்தைச் சீதனமாகக் காட்டி, பெயர் பெற்ற டாக்டரை மருமகனுகப் பெற்றனர்.

என் அண்ணன் டாக்டராகப் படித்திருந்தால் இப்படி அசம்பாவிதம் நடைபெற்றிருக்காது என்று அந்தப் பெண்ணின் தாயார் கூறியது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. பணம் படைத்த பெண்கள் பெரிய உத்தியோகஸ்தர்களையே மணம் செய்ய எண்ணும்போது ஆண்களும் சீதனம் கேட்பது எப்படி மானங் கெட்ட பிழைப்பாகும். என் தம்பி இப்போது டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கிருன். தான் குறிப்பிட்ட சீதனத்துடன்தான் திருமணம் செய்வேன் என்று கூறுவதில் அனுபவஞானம் இல்லாமலா போய்விட்டது?

சீதனத்தால் எத்தனையோ பேரின் வாழ்க்கை கெட்டுப் போய்விடுவது உண்மைதான். பெண்களைப் பெற்ரேர் பேரம் பேசி, அதிக சீதனம் கொடுக்க முற்படுவதினுல்தான், இன்று ஆண்கள் சீதனம் வேண்டுமென ஒற்றைக் காலில் நிற்கின்றனர்.

திருமணப்பதிவின் போது ஆண்களையும் சீதனத்தைப் பதியுமாறு கேட்டாலன்றிக்கல்யாணம் செய்ய மாட்டாராம் திருமகள். இந்நிலையில், இவர் சீதனத்தை அறவே வெறுக்கவில்லை. பெண்ணுக்குப் பதில் ஆண் 'சீதனம்' கொண்டு வந்தால் என்ன என்பதுதான் இவர் கட்சி. அப்படியானுல் ஆண் சீதனம் கேட்பது மாறிப் பெண் சீதனம் கேட்கும் நிலை ஏற்பட்டால் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளுவார் போலும்! சீதனம் கேட்கும் நிலையை இவர் ஒழிக்க விரும்பவில்லை, ஆணுக்குப் பதில் பெண் சீதனம் கேட்க வேண்டும் என்றுதானே கேட்கிருர். இப்படி மாறினுல் இன்றைய சீதனப் பிரச்சினை தீருமா? காலுக்குப் பூட்டிய விலங்கைக் கழற்றிக் கைக்குப் பூட்டிய கதையாகத்தான் இருக்கும்.

என் தீர்மானம் என்ன தெரியுமா? சீதனம் கேட்பவரைத் திருமணப் பதிவன்று, "ஐயா, என்னையல்லவா கல்யாணம் பண்ணவந்தீர் என்று நினைத்தேன், சீதனத்தைத் தான் என்று தெரிந்தால் வேறிடத்தைப் பாரும்" என்று துணிந்து கூறிவிட்டு எழுந்துவதே அது. யார் என்ன சொன்னுலும் நான் கவலைப்படப்போவதில்லை. கல்யாணமே இல்லையே என்ருலும் அசையப் போவதில்லை. இப்படி நான் ஆரம்பித்தால் எத்தனை பேர் பின்பற்றுவீர்கள்! ஒருவர் மட்டுமே செய்தால் ஒன்றும் ஆகாது. எல்லோரும் சேர்ந்தால்தான் வெற்றி கிடைக்கும். இன்று இரண்டு மூன்று படித்த பெண்கள் துணிந்துவிட்டால், நாளை படிக்காத பல பெண்களும் துணிந்துவிடுவார்கள். பெரியவர்கள் இவ்விஷயத்தை எதிர்த்தாலும் கவலைப்படக் கூடாது. பெரியோர் எதிர்க்காத காரியம் உலகிலே எங்கிருந்தது?

சாதாரண பெண்கள் இப்படித் துணிவதிற் பயனிராது. பணம் படைத்தவர்கள்தான் முன்வர வேண்டும். அதிக விலை கொடுத்து மாப்பிள்ளையை வாங்கினுல் உயர்தர மாப்பிள்ளையை முன்பின் யோசியாது மறுக்க வேண்டும். தகாத விஷயங்கட்கெல்லாம் பெற்ரேரை எதிர்க்கத் தெரிந்த பெண்கள், இந்த மானங்கெட்ட பிழைப்பை எதிர்த்தால் அப்படி என்ன குடி மூழுகிப் போய்விடும்? இப்படிச் செய்யத் துணிவு போதாவிட்டாலும், இத்தகைய பெண்களையாவது நீங்கள் கட்டாயம் ஆதரிக்க வேண்டும். அதைவிட்டு ஆண்களையும் சீதனம் கொண்டு வரும்படி கேட்பதாயின் இந்த மானங்கெட்ட பிழைப்பு நீடித்துக் கொண்டேயிருக்கும்.

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனிய.

# “சிறையிலிருந்து தப்பியபின்னரும் பகை இருந்தது”

## அராலி கொலைவழக்கில் இறந்தவரின் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அராலி கொலை வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசுவாலட்டன் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ராமன் முத்தன் என்பவரைக் கொலைசெய்ததாக கணபதி நாகமணி, கணபதி கந்தையா, ஆறுமுகம் மார்க்கண்டு ஆகிய மூவர்மீது குற்றம்சாட்டி சங்கானைப் பொலிஸார் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

சங்கானைப் பொலிஸைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் கே. குமார் பிராஸிக்கூஷன் தரப்பில் ஆஜரானர். எதிரிகள் தரப்பில் திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானர்

காலஞ்சென்ற முத்தனின் மனைவி அன்னம்மா சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்.

ஒருவருடத்திற்குமுன்புதான் எனது கணவர் சிறையிலிருந்து வந்தார். குழந்தையன் என்பவரைக் கொலைசெய்ததாக அவர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது. எதிரிகள் மூவரும் குழந்தையனின் பேரர்கள். குழந்தையனைக் கொலைசெய்ததற்காக என் கணவன் சிறைக்குப் போய்வந்தபின்னரும் அம்மூவருக்கும் என் கணவருக்குமிடையில் பகைமைஇருந்து வந்தது.

சம்பவம் நடந்த தினத்தன்று மாலை ஏழு மணியளவில் என் கணவர் குளிப்பதற்காக வீட்டைவிட்டு வெளியே சென்ருர். அவர் சென்ற சில நிமிஷங்களில் அவர் சென்ற திக்கிலிருந்து அவலக்குரல் கேட்டது. உடனே எனது பிள்ளைகளுடன் அந்த இடத்திற்குச் சென்றேன். என்னுடைய கணவன் நிலத்தில் வீழ்ந்துகிடந்ததைக் கண்டேன். அவ்விடத்தில் எனது உறவினர் ஒருவர் நின்று எதிரிகள் மூவரும் முத்தனைத் தாக்கிவிட்டு ஓடிவிட்டதாகத் தெரிவித்தார்.

அச்சமயத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்ததால் பொலிசுக்கு அறிவிக்கவோ காயமடைந்தவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லவோ முடியாது போய்விட்டது. சம்பவம் நடந்து இரு மணி நேரத்தின்பின் அவர் இறந்துவிட்டார். அடுத்தநாட் காலையிலேயே பொலிசுக்கு அறிவிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணையில் வழக்கறிஞரின் கேள்வியொன்றுக்கு அன்னம்மா பதிலளிக்கையில் சென்ற ஐந்து வருஷகாலமாக இதே இடத்தில் வருடமொரு கொலைச்சம்பவம் நடந்துவருவதாகக் கூறினர்.

இளையவன் குணரத்தினம் சாட்சியமளித்தபின் மேல் விசாரணை ஜூலைமாதம் 11ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வெள்ளி 30-6-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரைஇசை, 7-45 இரத்தினதேவி நல்லசேகரம் - பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 வி. குமாரசாமி - நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-30 “கொழும்புத் திட்டம்” - பேச்சு, 7-45 ஆகாசவாணி அஞ்சல், 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி, 10-00 நேயர் விருப்பம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 நாகப்பட்டினம் பி. எல். ஜி. எம். சிவசுப்பிரமணியம் சகோதரர்கள் - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளருக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 2-15 தேசிகவிநாயகம்பிள்ளை பாடல்கள் பாடுபவர்: டி. எம். கமலா.

மாலை 4-45 விவிதபாரதி (சர் நாடக சங்கீதம்), 5-35 காந்தி கதை, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 9-15 பலகணி, 9-30 “வாராய் நிலவே வா” - மெல்லிசை நிகழ்ச்சி, 9-45 இசைமாலை.

## கிராமாபிவிருத்தியில் அரசினர் நம்பிக்கை

குளியாப்பிட்டி, ஜூன் 29

பள்ளிக்கூடப் பாடத் திட்டத்தில் கிராம அபிவிருத்தியும் ஒரு பாடமாக விரைவில்சேர்க்கப்படும் என திரு. பர்னண்டோ பிள்ளை மகாலேகம் படமாளிகையில் நடைபெற்ற கூட்டத்திற் பேசும் போது குறிப்பிட்டார்.

கிராம முன்னேற்றச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி தீர்மானங்களை நிறைவேற்றி அரசாங்கத்திடம் இருந்து பண உதவி பெற்ருல் சங்கம் தனது பணியை நன்கு நிறைவேற்றிவிடுகின்றதெனப் பலர் அபிப்பிராயப்படுகிருர்கள். தமது ஆற்றலுக்கேற்ப ஒவ்வொருவரும் உதவி செய்யாது வெளியார் உதவியை நம்பியிருந்தால் சமூகம் விருத்தியுற மாட்டாது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிங்கிரியாத் தொகுதி எம். பி. திரு. எல். பி. ஜயசேன தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:

“கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்னர் அரியபணிகளைச் செய்திருக்கின்றன. அண்மையில் பலத்த சக்திகள் இவற்றைத் தடை செய்து விட்டன. ஆனல் நம் முன்னேற்றத்தில் அரசாங்கம் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறது. இந்த இயக்கத்தை அரசாங்கம் ஒரு போதும் கைவிடமாட்டாது.”

## கச்சேரி வேலைகள்

### சுணங்காதிருக்க புதிய திட்டம்

கொழும்பு, வியாழன்

கச்சேரி அலுவல்களைத் திருத்தி அமைக்கும் புதிய திட்டப்படி உள்நாட்டு, தொழில் கலாச்சார விவகார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா, இதுவரை கச்சேரிகள் கவனித்துக் கொண்டுவந்த சில வேலைகளை, ஸ்தலஸ்தாபனங்களிடம் ஒப்படைக்க எண்ணியுள்ளார். இதனல் கச்சேரிகளில் அனவசியமாக வேலைகள் சுணங்குவதைத் தடுக்க முடியுமெனக் கருதப்படுகிறது.

கச்சேரி இதுவரை கவனித்துவந்த அலுவல்களில் எந்த அளவுக்கு ஸ்தலஸ்தாபனத்திடம் கையளிக்கலாம் என்பதைத் தீர்மானிப்பதற்காக உள்நாட்டு அமைச்சும், ஸ்தலஸ்தாபன அமைச்சும், ஸ்தலஸ்தாபனங்களின் கடமைகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றன.

## நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டம்

கொழும்பு, வியாழன்

லக்சபான நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தின் இரண்டாவது கட்ட வேலைகள் அடுத்த மாதத்திற்குள் ஆரம்பமாக இருக்கின்றன.

வேலை முழுமூச்சாக ஆரம்பமானதும் அநேக தொழிலாளர் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சில பகுதிகளில் வேலை செய்வதற்கு வேண்டிய தொழிலாளர் இப்போதே சேர்த்துக் கொள்ளப் படுகிருர்கள்.

இரண்டாவது திட்டத்தின்படி நோர்ட்டன் பிரிட்ஜில் 50,000 கிலோ வாட் மின்சார நிலையமும் கிரான்ட்பாஸில் 25,000 கிலோவாட் மின்சார நிலையமும் நிர்மாணிக்கப்படும்.

## கீரிமலை - சங்கானை பஸ் சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த சிலகாலமாக நிறுத்தப்பட்டிருந்த கீரிமலை - சங்கானை பஸ் சேவை மீண்டும் தொடர்ந்து நடத்தப்பட விருப்பதாகத் தெரிகிறது.

## ஓய்வுபெற்ற டாக்டர்களை வேலையில் அமர்த்தும் திட்டம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க மருத்துவசேவைப் பகுதியைத்தற்காலிகமாக பலப்படுத்துவதற்காக, அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்ற டாக்டர்களையும், தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தும் டாகடர்களையும் அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ளும் திட்டமொன்றை சுகாதார மந்திரி செனட்டர் ஏ. பி. ஜயசூரியா அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருக்கிருர். இத்திட்டத்தின்படி ஓய்வு பெற்ற டாக்டர்களுக்கு நாள் ஒன்றுக்குக் 10 ரூபாயும், பிரயாணப்படியாக மாதமொன்றுக்கு 50 ரூபாயும் கிடைக்கும். தனிபபட்ட முறையில் தொழில் நடத்தும் டாக்டர்களுக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்று நிதிமந்திரியுடன் கலந்து ஆலோசித்த பிறகுதான் தீர்மானிக்க முடியும் என்று சுகாதார மந்திரி ஏ. பி. ஜயசூரியா தெரிவித்திருக்கிருர்.

நாட்டில் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தும் டாக்டர்களும், அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களுமாக 1000 பேர் இருக்கிருர்கள். புதிய திட்டத்தின்படி, இவர்களில் அரைவாசிப் பேரின் சேவையை அரசாங்கம் தற்காலிகமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று சுகாதார மந்திரி ஏ. பி. ஜயசூரியா அபிப்பிராயப்படுகிருர்.

சங்கானை வரியிறுப்பாளர் சங்கத்தின் முறைப்பாட்டிற்கமைய இவ்வேற்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டிருப்பதாவும் இதனை இ. போ. ச. ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

## ஆரம்ப சிகிச்சை நிலையம்

அல்லைப்பிட்டி, வியாழன்

“வைத்திய வசதி குறைவாக உள்ள நமது கிராமத்தில் இன்று பெருமுயற்சி காரணமாக அல்லைப்பிட்டி இளைஞர் மன்றம் ஓர் ஆரம்ப சிகிச்சை நிலையத்தை நிறுவியுள்ளது. அதோடு அதை நிர்வகிக்கும் பொறுப்பையும் அம்மன்றமே ஏற்றுக் கொண்டதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.” இவ்வாறு அல்லைப்பிட்டியில் புதிதாக நிறுவிய ஆரம்ப சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசிய திரு. சொலமன் கூறினர்.


## தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ உகந்தது ஜம்பிங் பிஷ்

### பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கண்மில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் கிடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.



ஏக விநியோகஸ்தர்கள்:

சி. டப்ளியு ஈ

கிடைக்குமிடங்கள்: சி. டப்ளியூ, ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ, தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

# லொறியின் கீழ் தலையைக் கொடுத்து உயிரை மாய்த்தார்

## தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

கோணாந்தோட்டத்தில் லொறியின்கீழ் தலையைக் கொடுத்து உயிரைமாய்த்துக் கொண்ட கனகசபை கனகரத்தினம் என்னும் இளைஞரின் மரணம் சம்பந்தமாகமரணவிசாரணை நடத்திய திடீர்மரண விசாரணை அதிகாரி கனகரத்தினம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

கனகசபை கனகரத்தினம் என்ற இளைஞர் சென்றதிங்கட்கிழமை நண்பகல் தமது வீட்டுக்கு முன்னால் அவரது லொறியின் பின்புறச் சக்கரங்களின் கீழ் தலையைக் கொடுத்து ஸ்தலத்திலேயே மாண்டார். அவரது மண்டை சக்கரங்களின்கீழ் அகப்பட்டு நொறுங்கியது.

இந்த மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர். விசாரணையின் போது காலஞ்சென்ற கனகரத்தினத்தின் தாயாரும் கனகசபையின் மனைவியுமான பாக்கியலட்சுமி சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:-

எனது இரு பிள்ளைகளில் கனகரத்தினம் தான் மூத்த மகன். அவர்தான் எங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வந்தவர். அவரை நசித்துக் கொன்ற லொறியின் சாரதியும் அவர்தான். எனது கணவர் ஒரு குடிகாரா. குடும்பத்தைப் பற்றி அவர் ஒருபோதும் கவலைப்பட்டது இல்லை. எனது அம்மா இருபது நாட்களுக்கு முன்னர்தான் காலமானர். கனகரத்தினம் தனது பாட்டி மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தவர். பாட்டி காலமானதும் கனகரத்தினம் பெரும் கவலை கொண்டிருந்தார்.

### திருமணத்தை எதிர்த்தேன்

சாதகம் பொருத்தமாகவிருந்தால் எனது சகோதரரின் மகளைக் கலியாணம் செய்யவும் கனகரத்தினம் விருப்பம் கொண்டிருந்தார். இந்தக் கலியாணத்தை நான் எதிர்த்தேன். எனது சொல்லை கனகரத்தினம் ஒரு நாளும் மீறியதில்லை. எனவே அந்தக் கலியாணத்தை விடுவதா என்னைப்புறக்கணிப்பதா என்ற சங்கடமான நிலையில் அவர் இருந்தார். இதன் விளைவாக அவர் மனவேதனையுடனிருந்தார்.

அவரது தம்பி புலேந்திரன் இ. போ. சபையின் மல்லாகம் 'டிப்போ'வில் ஒரு மெக்காணிக்காக வேலைபார்த்து வந்தார். சில நாட்களாக புலேந்திரன் வேலைக்குப் போகவில்லை. புலேந்திரன் ஏன் வேலைக்குப் போகவில்லையென்று கனகரத்தினம் என்னிடம் கேட்டார். எனக்குத் தெரியாதென்றும் டிப்போவில் விசாரிக்கும் படியும் அவரிடம் சொன்னேன்.

கனகரத்தினம் வெளியே சென்றுவிட்டு பிற்பகல் ஒரு மணியளவில் வீட்டுக்குத் திரும்பி வந்தார். புலேந்திரனைக் கையில் பிடித்து ஒரு அறைக்குள் இழுத்துச் சென்று கண்டபடி அடித்தார். சின்னமகனின் கூக்குரலைக் கேட்டதும் கனகரத்தினத்தைக் கூப்பிட்டு இவ்வளவு மோசமாக ஏன் அடித்தாய் என்று ஏசினேன். உடனடியாக கனகரத்தினம் லொறியை எடுத்துக்கொண்டு வெளியே சென்று கொஞ்சநேரத்தில் திரும்பிவந்தார்.

லொறியை வீட்டு வாசலில் நிறுத்திவிட்டு அதைப் பின்புறமாகச்செலுத்தினர். திடீரென்று லொறியிலிருந்து குதித்து பின்புறம் ஓடிக்கொண்டிருந்த லொறியின் பின் சில்லுகளின் கீழ் தலையைக் கொடுத்தார். சில்லு தலையை நசுக்கிவிட்டது. அவர் அந்த இடத்திலேயே மாண்டார்.

மோட்டார்கார் பரிசோதகர் திரு. டி. வி. எஸ். விதாரணே சாட்சியமளிக்கையில் சம்பவம் நடந்த இடத்தில் அந்த லொறியைப் பரிசோதனை செய்ததாகவும் அப்பொழுது இரண்டாவது கியர் போடப்பட்டிருந்ததாகவும் கூறினர். 'அக்ஸிலரேட்டருக்கும்' 'பொனட்டுக்கும்' தொடர்பாக ஒரு கயிறு கட்டப்பட்டிருந்ததென்று கூறிய திரு.விதாரணே 'அக்ஸிலரேட்டரை' எவரும் மிதிக்காமலே லொறி வேகமாக ஓட முடியும் என்றுர்.

புலேந்திரனின் சாட்சியமும் தாயார் கூறியதை ஒத்திருந்தது.

---

## இரு பிரமுகர்களுக்கு கௌரவ பட்டங்கள்

சென்னை, ஜூன் 29

சென்னை முன்னள் பிரதம நீதிபதி திரு. பி. வி. ரஜாமன்னருக்கு "டாக்டர் ஆப்லா" என்ற கௌரவப் பட்டமும், சென்னை பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் லஷ்மணசாமி முதலியாருக்கு "டாக்டர் ஆப் சயன்ஸ்" என்ற கௌரவப் பட்டமும் வழங்குவதென சென்னை பல்கலைக்கழக சிண்டிகேட் தீர்மானித்துள்ளது. வருகிற ஆகஸ்ட்2ம் திகதிசென்னை சர்வகலாசாலை 100ம் ஆண்டு விழாக் கட்டிடத்தை உப ஜனதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் திறந்து வைக்கும்போது இப்பட்டங்கள் வழங்கப்படும்.

---

## விளையாட்டுத் துறையில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வீரரமணி 19-6-61 இல் 6 அடி 2 அங்குலத்தைத் தாண்டி ஒரு புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். 10-7-60 இல் 6 அடி 1 அங்குலத்தையும் 15-4-61 இல் 6 அடி 1 3/4 அங்குலத்தையும் இவர் பாய்ந்திருக்கிறுர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நீளம் பாய்தலில் 20 அடி 11 3/4 அங்குலத்தைத் தாண்டி புதிய உலக சாதனையை ஏற்படுத்திய கிழக்குஜெர்மனியைச் சேர்ந்த ஹில்ட்ரன் கிலோஸ் என்ற வீரரமணி 23-6-61இல் 21 அடி 0 3/4 அங்குல தூரத்தைப் பாய்ந்து தமது சாதனையை ஒரு அங்குலத்தால் முறியடித்துள்ளார். நீளம் பாய்தலில் 21 அடி தூரத்தை முதன்முதலாகப் பாய்ந்த பெருமை இப்பெண்மணியைச் சேரும்.

### 1964 இல் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுகள்

ஜப்பானிய தலைநகராகிய டோக்கியோவில் நடைபெறவிருக்கும் பதினெட்டாவது ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகள் 1964 ஒக்டோபர் 11 தொடக்கம் 25 வரை நடைபெறும் என்று சர்வதேச ஒலிம்பிக் குழு அறிவித்திருக்கின்றது. இதுவே முதன்முதலாக ஆசியாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் என்பது குறிப்பிடத்தக்கது. 17 வது ஒலிம்பிக் போட்டிகள் கடந்த வருடம் இத்தாலியின் தலைநகராகிய உரோமாபுரியில் நடைபெற்றன.

மாரிகால விளையாட்டுப் போட்டிகள் ஐரோப்பாவில் ஆஸ்திரியா நாட்டில் இன்ஸ்பிரக் என்ற இடத்தில் 1964 ஜனவரி 29 தொடக்கம் பெப்ரவரி 9 வரை நடைபெறும் என்றும் அறிவிக்கபபட்டிருக்கிறது.

---

## மார்க்கெட் விலை வாசிகள்

### தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், திங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 105 - 50 |
| நகைப்பவுன் புதிது | 98 - 00 |
| ,, பழையது | 96 - 00 |
| தங்கப்பவுன் | 102 - 00 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |

### காய் கறி

மார்க்கெட்டிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | ரூ—ச |
|---|---|---|
| கோவா | ருத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | ,, | 0 - 18 |
| கத்தரிக்காய் | ,, | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | ,, | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | ,, | 0 - 65 |
| காரட் | ,, | 0 - 75 |
| லீக்ஸ் | ,, | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | ,, | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | ,, | 0 - 60 |
| வெண்டைக்காய் | ,, | 0 - 45 |
| பொன்னாங்காணி | ,, | 0 - 22 |
| வல்லாரை | ,, | 0 - 90 |
| பூசனிக்காய் | ,, | 0 - 14 |
| சுத்தமானநெய்போத்தல் | | 6 - 50 |
| நாட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0- 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது)கொத்து | | 0- 75 |
| புளி | ,, | 0 - 85 |
| தேங்காய் எண்ணெய் | போத்தல் | 0 - 80 |
| எள் எண்ணெய் | ,, | 2 - 50 |
| வெள்ளைப்பூடு, (மார்க்கெட்நிலை) | ரூ. | 1 - 47 |

### கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 33 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்) | 1 - 23 |
| ஸயாம் மிளகாய் | 1 - 04 |
| சின்னச் சீரகம் | 0 - 97 |
| மஞ்சள் | 0 -58 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |
| வெள்ளைப்பூடு (பம்பாய்) ருத்தல் | 0 - 35 |

முருங்கைக்காய் 1க்கு - 40 சதம். மிளகு 1 ருத்தல் ரூ. 3 - 22. (கட்டுப்பாட்டுவிலை இல்லை)

---

## கோடை மகாநாடு

கொழும்பு, வியாழன்

இலங்கை, பிரிட்டன் மற்றும் 5 ஸ்காண்டிநேவிய நாடுகளைக் கொண்ட 110பேர் கோடை மகாநாடு ஒன்றில் பங்குபற்றிக் கொள்ளுவார்கள். நார்வே பிரம்ம ஞானசங்கம் இம் மகாநாட்டை ஒழுங்கு செய்துள்ளது. ஜூலை 3ம் திகதி வரை இம் மகாநாடு நடைபெறும்.

---

## சீன புனித தந்தம்

அனுராதபுரம், வியாழன்

சீனப்புனிதத் தந்தம் நாளை இங்கிருந்து கண்டிக்கு கொண்டுசெல்லப்படும். ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்பட்டு அது கண்டி தலதா மாளிகையில் காட்சிக்குவைக்கப்படும். ஜூலை 8ம்-தேதி கண்டியிலிருந்து நுவரேலியாவுக்கு புனிதச் சின்னம் எடுத்துச் செல்லப்படும்.

---


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கும்பனித்தெரு) வெம்பிளி (கண்டி)

★ பதியே நிதியென்று பண்போடு வாழும் 'கட்டிய மனைவி கலா இருக்க, கண்ட பெண்களைக் காதலித்த பட்டணத்துச் சீமானின் பகட்டு வாழ்க்கை பலனளித்ததா...?

★ கள்ளமறியாது துள்ளித் திரிந்த கலாவை நோக் விதி எள்ளி நகையாடியது...

★ கணவனே கதியென்று கடைப்பிடித்த கலா என்ன ஆனள்...?

★ இருமனம் கலந்த திருமணம் முடிந்ததா...?

— பார்த்துப் பதில் காணுங்கள் —




பிரேம் நஸீர், ராகினி, வீரப்பா, எம். என். ராஜம், வி. ஆர். ராஜகோபால் நடித்த

இருமனம் கலந்தால் திருமணம்

பின்னணி: சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எஸ். ஸி. கிருஷ்ணன், ராகவன், ஜமுனு ராணி.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்

சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்

ஜெமினி கணேசன் நடித்த

ம கே ஸ் வ ரி

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30 மணிக்கும் மாலை 5-30மணிக்கும்

எஸ். எஸ். இராஜேந்திரன் - பண்டரிபாய் நடித்த

குலதெய்வம்

Sons and Lovers

(Adults only)

சன்ஸ் அன்ட் லவர்ஸ்

(வயது வந்தவர்களுக்குமட்டும்)

பிற்பகல் 2, 3-45 சனி, ஞாயிறு காலை 10-30


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.